தாத்பரியம் :—இவ்வுலகில், 'ஓடலீலை' யென்னும் நௌகா சரித்திரத்தைக் கேட்டவர்கள் ஸன்மார்க்கங்களுடன் கூடின சிரஞ்சீவிகளாய் விளங்குவார்கள். அவர்களுக்கு ஸத்புத்திரர்களுமுண்டாகி, ஐச்வரியமு முண்டாகி, மேன்மையாக விளங்குவார்கள்.

1. சார்தூலம் :—

லோகானுக்ரஹகாரியை முனு ரமா - லோலுண்டு நந்தாத்மஜுன்
டா காந்தாமணுலன் ரமிம்ப மதிலோ - னுஹ்லாத ஸம்யுக்துடை
பாகாரி ப்ரமுகுல் முனீந்த்ர கணமுல் - ப்ரம்மேச்வருல் மெச்ச தா
நௌகாக்ரீட னொனர்சே கோபிகலதோ - நாராயணுண்டத்தரின்.

தாத்பரியம் :—ஸ்திரீ ரத்னங்களான கோபியர்களை ரமிக்கச்செய்யும் பொருட்டு, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அதிக சந்தோஷத்துடன் கூடினவராய் பிரம்மேச்வர இந்திராதி தேவர்களும், மற்றும் மஹிமைவாய்ந்த முனிபுங்கவர்களும் மெச்ச ஓட லீலைகளைச்செய்தார்.

2. சார்தூலம்:—

சித்ரம் பேமனி * வின்ன விந்து மதிலோ—சின்மாத்ருடௌ கிருஷ்ணு சா
ரித்ரம்பெல்ல வினங்க நிண்டு ஸுகமுல்—வ்ரேபல்லெலோ தோசகா
பத்ராஹாரமுசேத நிர்மமதலை—ப்ரம்மக்ஞுலௌ ரீதிகா
புத்ராகார தனம்புலன் மரசிரே—புண்யாத்மலௌ கோபிகல்.

தாத்பரியம் :—ஆச்சரியம் என்னவென்று சொல்லுவேன்! கோகுலத்தில், சித்ஸ்வரூபியான ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் திவ்விய சரித்திரங்களை கோபியர்களெல்லோரும் கேட்டு மனதில் அதிக குதூஹலமாக இலையாகாரத்தினால் மமதையறறவர்களாய் ப்ரம்மக்ஞர்களான மஹாத்மாக்களைப்போல் தன் வீடு, தன் புத்திரன், தன் சொத்து என்னும் விஷயங்களை மறந்துவிட்டார்களே! (அதாவது கிருஷ்ண பரமாத்மாவினிடம் ஈடுபட்டவர்களாய்க்காணப்பட்டார்கள் என்பது கருத்தாகும்.)

## நாடக ஆரம்பம்

நிகழுமிடம் : யமுனா நதிக்கரையிலுள்ள கோகுலம்.
காலம் : சாயந்திரவேளை.
பாத்திரர்கள் : கிருஷ்ணன், கோபியர்கள்.

---

* வின்ன விந்து வினரே.

வசனம் :— கிருஷ்ண பரமாத்மாவானவர் கோபிகைகளின்பேரில் மிக்க அன்பு பூண்டவராய், வேணுகானம் செய்யும் விதம் எவ்வாறெனில் :—

கந்தபத்யம் :—

7. முரஹருடானந்தமுதோ - முரளினிகோனி ஸகல ஜனுலு மோஹிம்பனு தா
ஸரிகமபதநிஸ் யனுசுனு - கருணனு கரஜமுலசேத கானமு ஸல்பேன்.

தாத்பரியம் :—முராசுரனைக்கொன்ற கிருஷ்ண பரமாத்மாவானவர் அச்சமயம் சந்தோஷத்துடன் புல்லாங்குழலைக்கையிலெடுத்து, எல்லா ஜனங்களும் கேட்டு மோஹிக்குமாறு, ஸரிகம பதநிஸ் யென அதிமதுரமாக தன் விரல்களைக்கொண்டு கானம் செய்தார்.

வசனம் :— வேணுகானத்தைக்கேட்ட கோபியர்கள் அச்சமயம் என்ன செய்கிறார்களென்றால் :—

கந்தபத்யம் :—

8. வீனுல வேணுரவாம்ருத - பானம்புனு ஜேஸி சேஸி பலு விரஹமுசே
ஸ்ரீநாதுனி வேதகுசு கஜ - யானலு மரி வீதி வீதி திரிகிரி மமதன்.

தாத்பரியம் :—யானையைப்போன்ற கம்பீரமான நடையையுடைய கோபிகைகள், கிருஷ்ண பகவான் செய்த வேணுகான நாதமாகிய அமிர்தத்தைச்செவியாரப்பருகி, அதிக விரஹமுண்டானவர்களாய், கிருஷ்ணன் எங்கே! கிருஷ்ணன் எங்கே! யென்று தெருத்தெருவாகப்போய்த்தேட ஆரம்பித்தார்கள்.

வசனம் :— அச்சமயம் கிருஷ்ண பகவான், இலந்தம்பழம் பறிக்கப்போகும் நிமித்தமாகக் கைநிறைய முத்துக்களை யெடுத்துக்கொண்டு நடந்துவருவது எவ்வாறெனில் :—

கந்தபத்யம் :—

9. முங்கட க்ரம்மின மேகவு - ஸங்கமு லெடபாஸினட்டி சந்துரு வகனே
முங்குருலனு தோலகிம்ப ஜே - லங்கேடி ஸ்ரீகிருஷ்ணு மோமு லலனலு கனரே.

தாத்பரியம் :—மேகக்கூட்டங்களால் மறைக்கப்பட்டிருந்த சந்திரன், மேகங்கள் சிதைந்துபோன பின்னர், எவ்வளவு பிரகாசத்துடன் காணப்படுமோ, அப்படிப்பட்ட பிரகாசத்துடன் கோபிகைகளுக்குக் கிருஷ்ண பரமாத்மாவின் முகம் தென்பட்டது.

வசனம் :— அப்பொழுது கோபஸ்திரீகள் என்ன செய்கிறார்களென்றால் :—

சார்தூலம் :—

3. ஸ்ரீரம்யம்பகு கோகுலம்புன ஜெலுல் - செல்வொந்த ச்ருங்காருலை
ஸாரா சாருனி ஜூட ஜூட மதிலோ - ஸந்தோஷமுல் மீரகா
ராரா கௌகிடிகம்சு வேடுசு மதின் - ராஜில்லு ஸ்ரீகிருஷ்ணுதோ
நாரீரத்னமுலெல்ல கூடி சனிரா - னந்தாம்புதிந் நீதுசுன்.

தாத்பரியம் :—அலங்காரம் செய்துகொண்ட சௌந்தர்யவதிகளான கோபிகைகள் கிருஷ்ணனைப்பார்த்துப் பார்த்து சந்தோஷம் மேலிட்டு, ஆனந்த பரவசக்கடலில் நீந்தும் பாக்கியவதிகளாகக் காணப்பட்டார்கள்.

வசனம் :— பிறகு அப்பெண்மணிகள், ஆடல் பாடலோடு கிருஷ்ணனுடன் குதூஹலமாகச் செல்வது எவ்வாறெனில் :—

# 1. "ச்ருங்காரிஞ்சுகொனி"

**28.** ஸாரடிராகம்—ஆதிதாளம் { ஸரிமபநிஸ் / ஸ்நிதபமகபமரீஸ

| । 4 | ○ | ○ |
|---|---|---|
| பல்லவி | | |
| 1. ; ஷ்ஸா ஷ்ஸா ; ; ஷ்ஸ நி நி த பா | பமப த ப த நி த | த ப மா ம க ரீ |
| . ச்ருங் கா . . ரி . . ஞ்சு கோ | னி. . . . . . . | வே. ட லி . ரி |
| ; ம ரி ம ரி ஸ ஸ - ரீ ரீ ப ம மா | ம ரீ , ; ம ம | ரிஸ- நிஸரிமப நி |
| . ஸ்ரீ . . கிரு . . ஷ்ணுனிதோ . . | ணு . . . ஸங் . | தோ ஷ . மு .கா . |
| 2. ஷ்ரி-ஸ் நிஸ்ரிக்ரிரிஸ்- நிஸ் நிதபா | பமபத பத நித | த ப மா ம க ரீ |
| . . ச்ருங்கா . . . . . ரி . .ஞ்சுகோ | னி . . . . . . . | வே. ட லி . ரி |
| ; ம ரி ம ரி ஸ ஸ-ரீ ரீ ப ம மா | ம ரீ , ; ; | ஸா ; ; ; ‖ |
| . ஸ்ரீ . . கிரு . . ஷ்ணுனி தோ . . | ணு . . . . | . . . . ‖ |
| அனுபல்லவி | | |
| ; பா பா பா ; நீ மா பா | நீ நீ ஷ்ஸா நீ | ஷ்ஸா ; ஷ்ஸா ; |
| . அங் க ரங் . க வை . | போ . க மு | தோ . . . |
| ; பா பா பா ; நீ மா பா | நீ நீ ஷ்ஸா நீ | ஷ்ஸா ; ஷ்ஸா ; |
| . அங் க ரங் . க வை . | போ. க மு | தோ . கோ . |
| ஷ் நிஷ்ஸரிஷ்ஸா-ஷ் நி நீ நி த-பாபம | நீ தா பா ; | ; ; ஷ்ஸா ; |
| பா . . . ங்க நா . . ம . ணுவு . | யெந் . தோ . | . . கோ . |
| ஷ் நிஷ்ஸரிஷ்ஸா-ஷ் நி நீ நி த-பாபம | நீ தா பா ம க | ரி ம ரி ம ப ம ப நி |
| பா . . . ங்க நா . . ம . ணுவு. | யெந் . தோ . . | ஸோ. க . ஸா. க . |
| ஷ் ரி ‖ | | |
| . . ‖ (ச்ருங்) | | |

குறிப்பு :— 'ச்ருங்காரிஞ்சுகொனி வெடலிரந்தரு' யென்றும் ஒரு பாட மிருக்கிறது.

| \| 4 | O | O |
|---|---|---|
| சரணங்கள் | | |
| 1. ; நீ , நி தா - பா பா ப ம பா | நீ தா பா ; | ; ரீ , ம பா |
| . நவ் . வு சு கு லு கு . சு | ஞெ க தே . | . கோ. ப்பு ன |
| ஸ் நி நீ நி த பா-ப ம மா மா ம க | பா மா ம ரீ , | ; ; ஸா ; |
| பு . . வ்வு . ல மு . டு சு சு . | ஞெ க தே . . | . . . . |
| ; பா , ப பா பா ப நி ப ம பா | நீ நீ ஸ்ா ; | ; ஸ்ா , ஸ் ஸ்ா |
| . துவ் . வு சு கு ரு . ல . னு | ஞெ தே . | . கிருஷ் . ணு னி |
| ஸ் நிஸ்ரிஸ்ா-ஸ் நி நீ நி த - பாபம | நீ தா பா ; | ; ஸ்ா , ஸ் ஸ்ா |
| ர . . . வ்வ ஜே . . யு . சு னு . | யோ க தே . . | . கிருஷ் . ணு னி |
| ஸ் நிஸ்ரிஸ்ா-ஸ் நி நீ நி த-பாபம | நீ தா பா ம க | ரி ம ரி ம ப ம ப நி |
| ர . . . வ்வ ஜே . . யு . சு னு . | யோ க தே . . | வே. . ட் க . க . |
| ஸ் ரி \|\| | | |
| . . \|\| (ச்ருங்) | | |
| (மிச்ச சரணங்களையும் | இதேமாதிரி | பாடவும்) |
| 2. ம க டு வீ ட னு சு | ஞெ க தே | . ர வி கே |
| பி கு வு ன ஜே ர் சு சு | ஞெ க தே | . . |
| த கு னு த ன க ன சு | ஞெ க தே | . . பா த |
| யு க மு ல ஞெ த்து சு | ஞெ க தே | வே ட் க க \|\| |
| 3. ஸோ க்கு சு ஸோ லு சு | ஞெ க தே | . . கி ரு ஷ் ணு னி |
| க் ர க் கு ன மு த் தி டு | ஞெ க தே | . . |
| ப க் க கு ர ம் ம னு | சோ க தே | . . ம டு பு ல |
| ந க் க ர ஞெ ஸ கு சு | ஞெ க தே | வே ட் க க \|\| |
| 4. ப ரி ம ள மு ல ந் து சு | ஞெ க தே | . . ஸ்ரீ |
| ஹ ரி ஹ ரி ய னு சு னு | ஞெ க தே | . . |
| யு ர மு ன ஜே ர் சு சு | ஞெ க தே | . ப ய் யெ த |
| ஜ ரி பி வே டு கோ னு | சோ க தே | வே ட் க க \|\| |
| 5. ஸா ர ஸா க்ஷ ய னு சு | ஞெ க தே | . . க னு |
| ஸை க னு பி லு சு சு | ஞெ க தே | . . |
| ரா ரா ய னு சு னு | ஞெ க தே | . . தி யா க |
| ரா ஜ ஸ கு ட னு சு | ஞெ க தே | வே ட் க க \|\| |

தாத்பரியம் :—அந்த வனிதைகள் எவ்வளவோ ஸொகஸாக அலங்கரித்துக்கொண்டு, விசேஷ வைபோகத்துடனும் சந்தோஷத்துடனும் ஸ்ரீ கிருஷ்ணனுடன் புறப்பட்டார்கள்.

அச்சமயம் ஒரு கோபிகை சிரித்துக்கொண்டும் குலுக்கிக்கொண்டும், மற்றொரு கோபிகை பூ தொடுத்துக்கொண்டும், இன்னொரு கோபிகை தலைவாரிக்கொண்டும், ஒருவள் கிருஷ்ணனைப் பார்த்துப் பரிஹஸித்துக்கொண்டும்,

இன்னொருவள் கிருஷ்ணனைப் பார்த்துப் "புருஷனிவன்" என்றும், ஒரு வனிதை ரவிக்கையை இறுக்கிக்கொண்டும், ஒருவள் "தனக்குற்றவனிவன்" என்று சொல்லிக் கொண்டும், மற்றொருத்தி கிருஷ்ணனுடைய இரு பாதங்களைப் பிடித்துக்கொண்டும்,

ஒருவள் பிரமையினால் மயக்கங்கொண்டவளாகவும், ஒருவள் கிருஷ்ணனை முத்த மிட்டுக்கொண்டும், ஒருவள் "பக்கத்திற்கு வா"வென்று சொல்லிக்கொண்டும், இன்னொரு வள் தாம்பூலம் மடித்துக் கொடுத்துக்கொண்டும்,

கிருஷ்ணனுக்குக் கொடுப்பதற்காக வாசனையை யொருவள் எடுத்துக்கொண்டும், ஹரி! ஹரி! யென்று ஒருவள் சொல்லிக்கொண்டும், மற்றொருவள் கிருஷ்ண பரமாத்மாவை மார்பில் சேர்த்துக்கொண்டும்,

'ஸாரஸாக்ஷ'யென்று ஒருவள் சொல்லிக்கொண்டும், கண் ஜாடையாக ஒருவள் கிருஷ்ணனை யழைத்துக்கொண்டும் 'அருகில் வாடா'யென்று ஒருவள் சொல்லிக்கொண்டும், 'பரமசிவனுடைய மித்திரனே'யென்று மற்றொருவள் சொல்லிக்கொண்டும்,

இவ்வாறாகப் பாவையர்கள் உல்லாசமாகக் கிருஷ்ணனுடன் சென்றார்கள்.

வசனம் :—கிருஷ்ண பிரம்மானந்தக் கடலில் மூழ்கின கோபியர்கள் யதேச்சை யாக யமுனா நதிக்கரையை யடைந்த காக்ஷி எவ்வாறெனில் :—

சார்தூலம் :—

4. வாலாயம்புக ளாடலாடசே ஜெலுல் - வர்ணிஞ்சுசுன் னேகுசுன்
ஆலோலம்பகு புஷ்பவிருக்ஷமுலதோ - * ஹம்ஸீ ஸமூஹம்புதோ
கீலாலம்புன ப்ருங்கநாதயுதமௌ - கெந்தம்மி ப்ருந்தம்புதோ
காலாம்போதர தீப்திதோட ஜெலகே - காளிந்தினின் காஞ்சுசுன்.

தாத்பரியம் :—வனிதைகள் தங்கள் இஷ்டம்போல் ஆடிக்கொண்டும் வர்ணித்துக் கொண்டும் போகுங்கால், புஷ்ப விருக்ஷங்கள் (மெல்லிய காற்றினால்) அசைந்துகொண் டிருக்கும் காக்ஷியையும், ஹம்ஸ கூட்டங்களுடனும், சிவந்த தாமரை புஷ்பங்களிலுள்ள வண்டுகளின் இனிமையான நாதத்துடனும், கறுமுகிலை யொத்த நிறத்துடனும் பிரகாசிக் கும் காளிந்தியைப் பார்த்துக்கொண்டே சென்றார்கள்.

வசனம்:— அப்பொழுது அந்நதியின் பெருமையையும் லாவண்யத்தையும் புகழ்ந்து ஒருவர்க்கொருவர் குதூஹலமாகப் பாடுவது பின்வருமாறு :—

---

* ஹம்ஸம்புல ச்ரேணிதோ

# 2. "சூடரே செலுலார"

கோலாட்ட தரு]
51. பந்துவராளி ராகம்—சாபுதாளம் { ஸரிகமபதநிஸ் / ஸ்நிதபமகரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| பா , பா ப ம | ப தா பா ப ம | க கா ம ம கா | க ரீ ஷா ஷ நி |
| சூ . ட ரே . | செ லு லா ர . | ய மு ளு . . | . . தே வி . |
| ஷ ரீ கா கா | ம ம ம க ரி ரீ | க கா ம ம கா | க ரீ ரி ஷ ஷா ‖ |
| *ஸோ க ஸே ல்ல | ஸங் . . தோ . . | ஷ மு ன . . | . . . . . ‖ |
| | சரணங்கள் | | |
| | (பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. எ ர் ர னி | ப ங் கே ரு | ஹ மு லே | . . அ ந் து |
| யி ம் பை ன | ப் ரு ங் க நா | த மு லே | . . . . . ‖ |
| 2. இ ஸ<sup></sup>ூ க தி ன் | னே லு யே ந் த | தே லு பே | . . மே னு |
| யி ந் த் ர நீ | ல மு வ ண் டி | ந லு பே | . . . . . ‖ |
| 3. மெ டி க லு | வ ஜ் ர ம் பு | சி ல லே | . . அ ந் து |
| கு டி ல மை | . ன சி ன் னி | ய ல லே | . . . . . ‖ |
| 4. ஹ ம் ஸ ல | ர வ ளி சே | சா ல | . . தே வி |
| யு தி கோ சே | ல ங் கே னீ | வே ள | . . . . . ‖ |
| 5. போ ல து லா | . ர போ ர் த | ரி ண் ட் லே | . . தே னே |
| லோ லு கு க ர் | ஜ<sup></sup>ூ ர பு | ப ண் ட் லே | . . . . . ‖ |
| 6. ப ல மு ல | சே த் ரா க்ஷ | ல த லே | . . அ ந் து |
| ப ச் ச னி | சி லு க ல | ஜ த லே | . . . . . ‖ |
| 7. வி ந் த வி | . ந் த வி ரு ல | வா னே | . . ம தி |
| கே ந் தெ ந் தோ | ம ரு ல ய் | யே னே | . . . . . ‖ |
| 8. கோ கி ல | மு லு ம் ரோ | ஸே னே | . . ம ரு டு |
| கு ஸ<sup></sup>ூ ம ச | ர ம் பு லே | ஸே னே | . . . . . ‖ |
| 9. ச ல் ல னி | ம ல ய மா | ரு த மே | . . கி ரு ஷ் ண |
| ஸ் வா மி னி | கூ டே தி | ஸ த மே | . . . . . ‖ |
| 10. ரா ஜ வ | த ன லா ர | க ன ரே | . . தி யா க |
| ரா ஜ ஸ | கு னி பா ட | வி ன ரே | . . . . . ‖ |

* ஸொகஸூனு

தாத்பரியம் :— ஓ பாவையர்களே! யமுனாதேவியின் அழகைச் சந்தோஷத்துடன் பாருங்கள்!

மதுரமான ப்ருங்கநாதத்துடன் கூடின சிவந்த தாமரைப் புஷ்பங்கள்!

வெண்மை நிறமான மணற் குன்றங்கள்! இந்திர நீலத்தைப் போன்ற கறுப்பு நிற (யமுனா தேவியின்) உடல்!

வஜ்ர கற்களைப் போன்ற படிகள்! சுழன்று வரும் சிறிய அலைகள்!

ஹம்ஸங்களின் கானத்தினால் யமுனாதேவி இச்சமயம் பிரகாசிக்கிறாள்!

வனிதைகாள்! ரமணீயமான கொடி வீடுகள்! தேனொழுகும் பேரீச்சம் பழங்கள்!

பழங்களிருக்கும் திராக்ஷைக் கொடிகள்! அவைகளில் விளையாடும் பச்சைநிறக் கிளி ஜதைகள்!

விதவிதமான புஷ்ப மாரிகள்! மனதிற்கு எவ்வளவோ விரகத்தை உண்டாக்கின!

கோகிலங்கள் கூவுகின்றன; மன்மதன் (நம்மீது) புஷ்ப பாணங்கள் எய்கிறான்.

ஸுகமான மலயமாருதம் (வீசுகிறது); கிருஷ்ணஸ்வாமியை (நாம்) கூடுவது நிச்சயம்.

சந்திரனைப்போன்ற முகத்தையுடைய வனிதைகாள்! பாருங்கள்! தியாகராஜனுடைய மித்திரனின் கானத்தைக் கேளுங்கள்!

வசனம் :— இவ்வாறு கோபியர்கள் ஆனந்தமாக யமுனாநதியைத் தரிசனம் செய்துகொண்டிருக்கும் தருணத்தில், இவர்கள் கண்ணுக்கு நவரத்னங்களால் இழைக்கப் பட்ட அதிப்பிரகாசமுள்ள வெள்ளிமயமான ஓடம் தென்பட்டது. அவ்வோடத்தைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லுகிறார்கள் :—

கந்த பத்யம் :—

10. நல்லனி யமுனா நதிலோ - தெல்லனி ரங்கைன யோட தேலுசு மெரயன்
பல்லவ பாணுலு போடகனி - ஸல்லாபமுதோட க்ரீட ஸல்ப தலசுசுன்.

தாத்பரியம் :— கறுப்பான யமுனா நதியில், வெண்மையான நிறத்துடன் பிரகாசிக்கும் ஓடத்தில், தளிர்போன்ற கைகளையுடைய கோபிகைகள், ஸல்லாபமாக க்ரீடை செய்ய எண்ணினார்கள்.

வசனம் :— ஒருவரோடொருவர், கிருஷ்ணனுடன்கூடி ஓடத்தில் மன்மதக்ரீடை நடத்த ஆலோசனை செய்யும் விதம் எவ்வாறெனில் :—

கந்த பத்யம் :—

11. பாலுண்டதிகாக டீஹீ - பாலுனி தனயுண்டு மேனபங்கரு ஸொம்முல்
சால தரிஞ்சினவாடே - யேலாகோ வலதடஞ்சு னெஞ்சிரி தமலோன்.

தாத்பரியம் :— கிருஷ்ணன் ஒரு சிறுவன். மஹாராஜாவின் புதல்வன். தேகத்தில் தங்க நகைகள் அதிகம் போட்டுக்கொண்டிருக்கிறான். ஆகையினால் (அழைத்துப் போனால்) என்னவாகுமோயென்று தமக்குள் சிந்தித்தார்கள்.

# 3. “ஆடவாருலெல்ல”

**28.** யதுகுலகாம்போஜிராகம்—சாபு தாளம் { ஸரிமபதஸ் / ஸ்நிதபமகரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| 1. ஸ்ா , ஸ்ா ஸ்ா | ஸ் நி தா ; பமபா | ப தா த பா , ; | , ; ப ம ப த |
| *ஆ . ட வா | . . ரு . லெல் . ல | கூ . டி . . . | . . . . . . |
| 2. ஸ்ா , ஸ்ா ஸ்ா | ஸ் நி தா ; பமபா | ப தா த பா , ; | ப ம க க ரி ரீ |
| ஆ . ட வா | . . ரு . லெல் . ல | கூ . டி . . . | . . . ம . ன |
| ரி ஸா ரீ ரீ | ரி ரீ ரி ஸ ரீ | ரீ ப ம கா க ரீ , | ரீ ம க ரீ ஸா ஸா \|\| |
| மா . டே தா | . ம ஹ ரி ணி | வே . . . டி . . | . . . . . . \|\| |
| | சரணங்கள் | | |
| | (பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. கி ரு ஷ் ணு டு | ஜ ு . ட க | ம ன மு . | . . ஜ ல |
| க்ரீ ட ல | லு ப ம ஞ் சி | தி ன மு . | . . . . . \|\| |
| 2. க ம ல நே | த் ரு னி பா ஸி | ஸ ு க மா | . . ஓ ட |
| க ட் டு ஜே | . ர் ப ம ன | த ர மா | . . . . . \|\| |
| 3. ரா ஜ கு | மா ரு டு | வீ டு | . . ந வ |
| ர த் ன ஸோ ம் | மு லு பெ ட் டி | ஞ . டு | . . . . . \|\| |
| 4. ப ஸி பி ட் ட | கா த ட | வ ம் மா | . . வீ டு |
| ப ய ப டு | ஞே . தே லி ய | த ம் மா | . . . . . \|\| |
| 5. த ல் லி தோ | சா டி ப லு | கு து ரே | . . ம ன |
| த ல லு | வ ஞ் ச தூ | ரு து ரே | . . . . . \|\| |
| 6. மா ட கு | சோ டே ள னு | கா னி | . . ம ன |
| யா ட லு | தெ லி ய க | போ னி | . . . . . \|\| |
| 7. யு வ து லா | . ர மீ . | லோ னே | . . மீ ரு |
| யோ சி ம் ப | ப்ரோ த் து போ ய் | யீ னி | . . . . . \|\| |
| 8. சா லு சா | லி டு ரா | ர ம் மா | . . ஓ ட |
| ஸ லி ல ம ங் | . து தோ ய | ர ம் மா | . . . . . \|\| |
| 9. தி யா க ரா | ஜா ப் து டு | வீ டு | . . வ னி |
| த ல மா | ட லு வி ன | லே டு | . . . . . \|\| |

குறிப்பு :—இப் பாட்டில் பல்லவியை ஒரு கோபிகையும், சரணங்களில், ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கோபிகையுமாகப் பாடுகிறார்கள்.

* ஆடவாரமெல்ல

தாத்பரியம் :— பல்லவி

1-ம் கோபிகை :— நங்கையர்களே! நாமெல்லோரும் கூடி ஹரியை வேண்டிக் கொண்டு விளையாடலாமா?

சரணங்கள்

2-ம் கோபிகை :— கிருஷ்ணன் பாராமல் நாம் இன்றையதினம் ஜலக்ரீடை செய்வதற்கு நல்ல சமயம்!

3-ம் கோபிகை :— தாமரைக் கண்களையுடைய கிருஷ்ணனைப் பிரிவது ஸுகமா? அவனுதவி இல்லாமல் ஓடத்தைக்கரை சேர்க்க (நம்மால்) முடியுமா?

4-ம் கோபிகை :— ராஜ குமாரனிவன்! நவரத்தினங்களால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்துகொண்டிருக்கிறான்!

5-ம் கோபிகை :— சின்ன குழந்தையல்லவா இவன்? (ஓடமேறுவதற்கு) பயப்படுவானோ என்னமோ? தெரியாதம்மா!

6-ம் கோபிகை :— (ஒரு வேளை யாராவது பார்த்து) கிருஷ்ணனின் தாயிடம் போய் விஷயத்தைச் சொல்லி விட்டால் பிறகு நாம் தலை யெடுக்காவண்ணம் பேசுவார்களே!

7-ம் கோபிகை :— (நம் செய்கை) வார்த்தைக்கிடமாகுமே தவிர வேறில்லை.

8-ம் கோபிகை :— யுவதிகளே! இவ்வாறு உங்களுக்குள்ளே நீங்கள் யோசித்துக் கொண்டிருந்தால், பொழுது போய்விடுமே!

9-ம் கோபிகை :— போதும்! போதும்! இங்கே வாருங்கள்! ஓடத்தைத் தண்ணீரில் தள்ளுங்கள்!

10-ம் கோபிகை :— தியாகராஜனின் ஆப்தனுவான் இவன். வனிதைகளின் வார்த்தைகளைக் கேளான்.

வசனம் :— இப்படி தர்க்கமாடிக் கொண்டிருந்த கோபிகைகளின் மனதை யறிந்த ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா என்ன சொல்லுகிறாரென்றால் :—

த்விபதை :— (ஸம்பாஷணை)

கிருஷ் : புருஷுண்டே லேகனே பூபோணுலார - தருணுலகேபுடைன தகதுஸாஹஸமு ||

கோபியர் : பாமலு ஸந்தோஷ படியுண்டுவேள - காமகுடச்சோட காராது கிருஷ்ண ||

கிருஷ் : பலிமினிஸரஸம்பு பாகுகாதுஸுமி - கலனைன ஸௌக்யம்பு கலுகதேன்னடிகி ||

கோபியர் : பரகாந்தலனு ஜுசி பயமிந்தலேக - *வெறிமாட பல்கேவு வேட்கா கிருஷ்ண ||

கிருஷ் : மீகுஸேமம்பிந்து மிக்கிலிகல்க - ப்ராகடம்புக நேனு பல்கிதிஸும்மி ||

கோபி : பஸிபாலுடவு நீவு பாரமேள தெப்ப - சசிமுக ஜரிபிம்ப சக்தியுகலதே ||

கிருஷ் : நனுவினு த்ருணமைன நடேசுனுயனுசு - முனுவேத சாஸ்த்ரமுல் மொரபெட்ட ஜீவுல பாலிஞ்சு ஸ்ரீஹரிரீதி - கோவுலவேயைன கோல்லநேனைகடு [வினரே பாலனஸேதுனே பாக நா மனவி - யாலகிம்புடு மீரு யலிவேணுலார ||

தாத்பரியம் .—

கிருஷ் :— வனிதைகளே! புருஷர்களின் துணையில்லாமல் ஸாஹஸம் செய்வது ஸ்திரீகளுக்கு ஒருக்காலும் தகுதியாகாது.

---

* வெரபுமாடாடேவு.

கோபியர்கள் :— ஸ்திரீகள் சந்தோஷமாக இருக்கும் ஸமயத்தில், காமுகர்களான புருஷர்கள் அவ்விடத்திலிருப்பது சரியல்ல.

கிருஷ் :— பலாத்காரமான ஸரஸங்கள் சரியல்ல. என்றைக்கும் அவைகளால் சொப்பனத்தில் கூட சௌக்கியம் உண்டாகாது.

கோபியர்கள் :— ஓ கிருஷ்ணா ! அன்னிய ஸ்திரீகளைப் பார்த்து கொஞ்சமும் பயமில்லாமல் வேடிக்கையாகப் பித்தலாட்டமான வார்த்தைகளைச் சொன்னாயே !

கிருஷ் :— இப்பொழுது செய்யப்போகும் காரியத்தில் உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்பொருட்டே நான் நிஜமாகச் சொன்னேன்.

கோபியர்கள் :— சந்திரனைப்போன்ற முகத்தையுடையவனே ! சிறுவனான நீ இந்த பாரமான ஓடத்தை நடத்துவதற்கு உனக்கு சக்தியிருக்கிறதா ?

கிருஷ் :— பாவையர்காள் ! நானில்லாமல் ஓரணுவும் அசையாதென்று ஆதி காலத்திலிருந்து வேத சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவே ! அவைகளை நீங்கள் கேட்டதில்லையா ? ஜீவராசிகளைக் காப்பாற்றும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைப் போலும், பசுக்கள் ஆயிரம் இருந்தாலும் இடையன் நான் ஒருவன் காப்பாற்றுவதுபோலும் ரக்ஷிப்பேன். நான் சொல்வதைச் சரியாகக் கேளுங்கள்.

வசனம் :— ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா மொழிந்ததைக்கேட்ட கோபஸ்திரீகள் என்ன கூறினார்களென்றால் :—

கந்த பத்யம் :—

12. லோகமுலோ நினு சிசுவனி - சேகோனரா தனேடி யதி ப்ரஸித்தமுகாதே
ராகாசசிமுக வேட்கக - ஸ்ரீகர ஸரிவாரு நவ்வ ஜேதுவே யனகன்.

தாத்பரியம் :— ஸம்பத்கரனான பூர்ண சந்திரனைப்போன்ற முகத்தையுடைய ஓ கிருஷ்ணா ! லோகத்தில் உன்னைக் குழந்தையென்று கருதுவதற்கில்லை. வேடிக்கையாக பிறர் நகைக்கும்படி செய்துவிடுவாயே !

வசனம் :— இவ்வாறு தன்னிடத்தில் நம்பிக்கை யில்லாமல் பேசின கோபிகைகளைப் பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா என்ன சொல்லுகிறாரென்றால் :—

சார்தூலம் :—

5. ஸத்யம்பேள தனமாடலெல்ல ஜல - ஸஞ்சாருண்ட நே லேகனே
ப்ரத்யேகம்புக தெப்பலாடு நதிலோ - பத்யம்புகா தெப்புடேன்
நித்யம்பேள னபகீர்த்தி மீரலபலல் - நிர்வாஹமா ஸ்திரீல கீ
க்ருத்யம் பேவ்வரி போதனே வலதனேன் - கிருஷ்ணுண்டு பூபோண்ட்லதோன்.

தாத்பரியம் :— கோபியர்காள் ! நான் சொல்லும் வார்த்தைகள் ஸத்தியம். ஜல ஸஞ்சாரியான நான் இல்லாமல் எப்பொழுதும் ஓடத்தை நதியில் நடத்துவது ஹிதமாகாது. நீங்கள் அபலைகளானதினால் இந்த வேலையை உங்களால் நிர்வகிக்க முடியாது. இந்த வேலையைச் செய்வதற்கு உங்களுக்குயார் போதித்தார்களோ ? இப்படிச் செய்யவேண்டாம். செய்யப்புகின் ஒருவேளை உங்களுக்கு அபகீர்த்தி உண்டாகலாம்.

வசனம் :— இதைக்கேட்டு கோபிகாமணிகள் கிருஷ்ணன்மீது நிந்தை கூறுவதெவ்வாறெனில் :—

# 4. "ஏமனி நெர நம்மு"

**17.** ஸௌராஷ்டிர ராகம்—சாபு தாளம் { ஸரிகமபதநிஸ் / ஸ்நிதாபமகமரீஸ

குறிப்பு:— பல்லவியை எல்லா கோபியர்களும், ஒவ்வொரு சரணத்தை ஒவ்வொரு கோபிகையுமாகப் பாடுகிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| த தா ஸ்ா ஸ்ா | ஸ் நி தா; * நி த பா | ப தா த ப மா | க மா, க க ரி ஸ ரி |
| ஏ . ம னி | நெ . ர . நம் . மு | கோங் . து . மு | கிரு . . ஷ்ண . . . |
| ஸா, ஸா, நி தா | ஸ ரீ க ம ப ம | க ரீ ரீ ; | ஸா , ; ; \|\| |
| எங் . து . . கி | . ந்த வா . . . | து . . . | . . . . \|\| |
| | சரணங்கள் | | |
| 1. த தா ஸ்ா ஸ்ா | ஸ் ஸ்ா ஸ் ரி ஸ்ா | ஸ் நி தா; ஸ்ா ஸ்ா | ஸ் நி தா; * நி த ப ம |
| ஜ ல க மா | . டு வே . ள | † வ . லு . வ லு | தா . . . சி . மம். |
| ப தா ஸ்ா ஸ் * நி தா | ப ப ம ப ம ப த | த பா , , ; ; | பா , பா ப ம \|\| |
| ம ல யிம் . . . | ப க . லே . . . | தா . . . . . . | . . கிருஷ்ண. \|\| (ஏமனி) |
| (மிச்ச | சரணங்களையும் | இதே மாதிரி | பாடவும்) |
| 2. ம தி த ல | ர ம் ம னி | தி ல க மு | லி டி ப ண் ட |
| மோ வி ஞெ க் | க க லே . | தா . . . | . . கி ரு ஷ் ண \|\| |
| 3. மு னு நீ வு | வெ ன் ன ர | கி ஞ் சி த | ரு ணு ல |
| மோ மு ன | பூ ஸி போ லே | தா . . . | . . கி ரு ஷ் ண \|\| |
| 4. வ தி னெ கா | . ரி ச ந் த | மு ன வ ச் சி | பா வ ட |
| வ த லி ஞ் சி | போ லே . | தா . . . | . . கி ரு ஷ் ண \|\| |
| 5. தொ ரி கி தி | வ னி சா டி | செ ப் ப போ | தே . த ல் லி |
| யு ர மு ன | ணு ண் ட லே . | தா . . . | . . கி ரு ஷ் ண \|\| |
| 6. கா மி ஞ் சி | ய க் ஞ ப | த் னு லு வே | ட க வே ணு |
| கா ன மோ | ன ர் ப லே . | தா . . . | . . கி ரு ஷ் ண \|\| |

* கைசிகிநிஷாதம். † வலுவலு னெத்தி மம்மலயிம்பகலேதா.

| | | | |
|---|---|---|---|
| 7. ஆ நா டு<br>வா ன னு ண் | போ ங் க லி<br>ட . லே . | நீ கி டி<br>தா . . . | கோ ந் நா ள் ளு<br>. . கி ரு ஷ் ணு ‖ |
| 8. த ர னு தி யா<br>த ப் பி போ | . க ரா ஜ<br>வ ன லே . | வி னு து னி<br>தா . . . | ப லு கு லு<br>. . கி ரு ஷ் ணு ‖ |

தாத்பரியம் :—(கிருஷ்ணனுடைய பல பால்ய லீலைகளினால் தாங்கள் அடைந்த சிரமங்களை கோபியர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்.)

கிருஷ்ணா ! நாங்கள் உன்னை எவ்வாறு நன்றாக நம்புவது ? ஏன் (உனக்கு) இவ்வளவு வாதம் ?

ஸ்நானம் செய்துகொண்டிருக்கையில் எங்கள் சேலைகளை நீ ஒளித்துவைத்து எங்களைத் திண்டாடும்படி செய்யவில்லையா ?

உனது நெற்றியில் திலகமிட வந்த கோபியின் உதட்டை நீ கடித்துவிட வில்லையா?

வெண்ணையையுண்டுவிட்டு நீ கோபஸ்திரீகளின் முகத்தில் பூசிப் போகவில்லையா?

ஒரு கோபியிடம், அவள் சகோதரன் மனைவியைப்போல் வேஷம் தரித்துச் சென்று, அவள் வஸ்திரத்தைப் பிடித்திழுக்க வில்லையா ?

அகப்பட்டுக் கொண்டாயென்று செய்திசொல்லப்போன காலத்தில், நீ உன் தாயினிடத்திலேயே இருந்தாயல்லவா ?

ரிஷி பத்தினிகள் ஆசைப்பட்டு உன்னை வேண்ட, வேணுகானம் செய்து அவர்களை மயங்கும்படி செய்துவிட வில்லையா ?

(இந்திரனுக்கிடவேண்டிய) பொங்கலை அக்காலத்தில் உனக்கிட (இந்திரன் கோபத்தினால்) கொஞ்ச நாட்கள் மழை பொழிய வில்லையா? (கோவர்த்தனகிரியைத்தாங்கின கதை).

இவ்வுலகில், தியாகராஜனால் புகழப்பட்ட உனது வார்த்தைகள் தவறிப் போகாது யென்று கூறவில்லையா?

வசனம் :— இவ்வாறு கோபிகாமணிகள் நிந்தையாகக்கூறின வார்த்தைகளை கேட்ட கிருஷ்ண பரமாத்மா, தன்னுடைய ஸாமர்த்தியத்தைத் தெரிவிக்கும் விதம் எவ்வாறெனில்: :—

**கந்த பத்யம் :—**

13. ஈ நதினேகாது ஜலநிதி - கான நிபவ வார்தினிபுடு கடுவேகமுனன்
மானினுலார ஸுராஸுர - மானவுல தரிம்பஜேயு மாதவுகா நே ‖

தாத்பரியம் :—யுவதிகளே ! இந்த யமுனா நதியே யில்லை ; இன்னும் ஸமுத்திரத்தையும், கண்ணுக்குத் தென்படாத பவ ஸாகரத்தையும், தேவாதி தேவர்களையும், மானிடர்களையும் அதி சீக்கிரமாக நிர்பயமாக இப்பொழுதே தாண்டும்படி செய்விக்கும் திறமையையுள்ள மாதவனல்லவா நான் !

வசனம் :—கோபியர்களைப் பார்த்து மீண்டும் கிருஷ்ண பரமாத்மா என்ன சொல்லுகிறாரென்றால் :—

# 5. "ஏமேமோ தெலியக"

**17.** ஸௌராஷ்டிர ராகம்—சாபு தாளம் { ஸரிகமபதநிஸ் / ஸ்நிதாபமகமரீஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| த தா ஸ்ா ஸ்ா | ஸ் நிதா; * நிதபா | ப தா த ப மா | க மா,க கரிஸரி |
| ஏ . மே மோ | தே . லி . ய . க | ப லி கே . ரு | சே லு . . லா . ர . |
| ஸா , ஸ நி தா | ஸ ரீ க ம ப ம | க ரீ ரீ ; | ஸா , ; ; \|\| |
| நா . மீ . த | த ய லே . . . | க . . . | . . . . . . \|\| |
| | சரணங்கள் | | |
| 1. த தா ஸ்ா ஸ்ா | ஸ் ஸ்ா ஸ்ரி ஸ்ா | ஸ் நிதா; ஸ்ாஸ்ா | ஸ் நிதா; * நிதபம |
| மு னு மங் த | ர . கி . ரி | மு . னு . க கூ | . . ர்ம . மை . வீ . |
| பதாஸ்ாஸ் * நிதா | ப ப ம ப ம ப த | த பா , , ; ; | பா , ப ப ப ம \|\| |
| பு ன தா . . ல் | ச க . லே . . . | தா . . . . . | . . சேலு லா ர \|\| (ஏமேமோ) |
| (மிச்ச | ச ர ண ங் க ளை யு ம் | இ தே ம ா தி ரி | பாடவும்) |
| 2. க ரி ரா ஜ ு | ம க ரி சே | கா ஸி ஜே ங் | த க நே னு |
| க ரு ண ஜ ு | . ட லே . | தா . . . | . . . . . \|\| |
| 3. வெ ரு வ க | நீ ட ஜோ ச் | சி ன ஸோ ம | கு னி கோ ட் டி |
| வே . த மு | தே . லே . | தா . . . | . . . . . \|\| |
| 4. கா ளி ந் தி | லோ . னி கா | ளி யு னி | ம த ம் பு னு |
| கா ல ன | ண ச லே . | தா . . . | . . . . . \|\| |
| 5. ம க ர மு | கோ ம் போ யி | ன கு ரு | பு த் ரு னி |
| ம ரி தெ ச் சி | யோ ஸ க லே . | தா . . . | . . . . . \|\| |
| 6. தி யா க ரா | ஜ ு ன கு ஸ | கு டை ன | நா து ப் ர |
| தா ப மு | வி ன லே . | தா . . . | . . . . . \|\| (ஏமேமோ) |

தாத்பரியம் :—

வனிதைகளே ! (என்னுடைய ஸாமர்த்தியம் இன்னதென்று) ஒன்றும் தெரியாமலே என் மீது தயையற்றவர்களாய் என்னென்னமோ கூறுகிறீர்களே !

முன்பு ஸமுத்திரமர்த்தன காலத்தில், மூழ்கின மந்தர பர்வதத்தை நான் ஆமை ரூபமெடுத்து முதுகில் தாங்கிக் காப்பாற்ற வில்லையா ?

முதலைவாயில் அகப்பட்டுத் தவித்த கஜேந்திரன்மீது நான் கருணை காண்பிக்க வில்லையா ?

பயப்படாமல் ஜலத்திற்குட் சென்ற ஸோமகாஸுரனைக் கொன்று, வேதங்களைக் கொண்டுவர வில்லையா ?

காளிந்தி நதிக்குள்ளிருந்த மஹா விஷத்துடன் கூடின காளிய ஸர்ப்பத்தின் மதத்தைக் காலினல் அடக்க வில்லையா ?

முதலைவாயில் அகப்பட்ட எனது குரு (சாந்தீபினி மஹரிஷி) வின் புத்திரனை நான் மீட்டுக்கொண்டுவந்து கொடுக்கவில்லையா ?

பரமசிவனுக்கு நண்பனை இந்த கிருஷ்ணனின் பிரதாபத்தை நீங்கள் கேட்டதில்லையா ?

வசனம் :—

கிருஷ்ண பரமாத்மாவின் வார்த்தைகளைக் கேட்ட பின்னர் கோபிகாமணிகளுக்கு மிக்க தைரியம் உண்டாகி பின் வருமாறு கூறினர்கள் :—

கந்த பத்யம் :—

14. பாவஜ ஜனகுனி பலுகுலு - பாவம்புன ஸத்யமனுசு பயவிர ஹிதுலை
பாவமுன நிலிபி க்ருஷ்ணுனி - பாவடலனு பிகிய கட்டி பாமலு சனகன்.

தாத்பரியம் :—

மன்மதனின் பிதாவான கிருஷ்ணரின் வார்த்தைகளை ஸத்தியமெனக் கருதி பயமற்றவர்களாய், ஹிருதயத்தில் கிருஷ்ணனை நிறுத்தி, தங்கள் பாவாடைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டு பாவையர்கள் சென்றூர்கள்.

# 6. “ஓடனு ஜரிபே”

65. ஸாரங்கராகம்—ஆதிதாளம்

ஸரிகமபதநிஸ்
ஸ்நிதபமரிக *மரிஸ

| \|4 | O | O |
|---|---|---|
| பல்லவி | | |
| 1. ; ஸா , ப மா பா பா பா ; | ; ப தா ப மா | த த ப ம-ரீ க *ம |
| . ஓ . ட னு ஜ ரி பே . | . மு . ச்ச ட | க . ன . ரே . . |
| 2. ரி ஸ-ஸா , ப மா பா பா பா ; | ; ப ஸ் நி த ப ம | த த ப ம-ரீ க *ம |
| . . ஓ . ட னு ஜ ரி பே . | . மு . . ச்ச ட . | க . ன . ரே . . |
| ரி ஸ-ப ப த த ப ம-த த ப ம ரீ க *ம | *ம ரீ , ரீ ; | ரீ ; ஸா ; \|\| |
| . . வனித . லா . . . ர . நே . . | டு . . . . | . . . . . \|\| |
| அனுபல்லவி | | |
| ; ஸா , ரி ஸா ஸ்ா ஸ்ா ஸ் ஸ் ஸ்ா | ; நி ஸ் ரி ஸ் ஸ் நி | தா த நி நி த பா |
| . ஆ . ட வா . ரு ய மு ண | . கா . . ட . கிருஷ் | ணு னி . கூ . டி |
| ; த ரீ ஸ் ஸ்ா ஸ் நி தா பா ப ம | ப த தா த ப ப ம | த த ப ம ரீ க *ம |
| . ஆ . டு சு பா . . டு சு . | னங் . . த . ரு . | ஜெ . . . ட க . |
| ரி ஸ \|\| (ஓடனு) | | |
| . . \|\| | | |
| சரணங்கள் | | |
| 1. ; பா , ப பா பா பா பா ; | ; ப தா ப மா | த த ப ம ரீ க *ம |
| . கோங் . த ரு ஹ ரி கீர் . | . த்த ன மு ல | பா . . . ட க . |
| ரி ஸ-பா , த பா த த ப ம ரீ க *ம | ரி ஸ-ஸா பா ப ம | ப ம மா பா ; |
| . . . கோங். த ரா னங் . த . மு ன . | . . . மு . த்து. | லா . . ட . |
| ; ஸா , ரி ஸா ஸ்ா ஸ்ா ஸ்ா ; | ; நி ஸ் ரி ஸ் ஸ் நி | தா த நி நி த பா |
| . கோங் . த ரு ய மு ண . | .தே . . வி . னி | வே . . . . ட |

* சுத்த மத்யமம்

| \| 4 | O | O |
|---|---|---|
| ; த ரீஸ் ஸா ஸ் நி தா பா ப ம | ப த தா பா மா | த த ப ம ரீ க *ம |
| .கோந் . த ரி மு . . த்ய பு . | ஸ . ரு ல ஸி | யா . . . . ட . |
| ரி ஸ ‖ (ஓடனு) | | |
| . . ‖ | | |
| (மிச்ச சரணங்களையும் | இதே மாதிரி | பாடவும்) |
| 2. கோ ந் த ரு த ட ப ட | பா லி ண் ட் லு | க த ல |
| கோ ந் த ரி ப ங் க ரு | வல் வ லு | வ த ல |
| கோ ந் த ரி கு டி லா ல | க . மு லு | மே த ல |
| கோ ந் த ரு ப லு கு சு | கி ரு ஷ் ணு னி | க த ல ‖ (ஓடனு) |
| 3. கோ ந் த ரு தி யா க ரா ஜ | ஸ கு டே | ய ன க |
| கோ ந் த ரி க ஸ் தூ ரி | போ . ட் டு | க ர க க |
| கோ ந் த ரி கோ ப் பு ல | வி ரு லெ ல் ல | ஜா ர க |
| கோ ந் த ரி க ங் க ண | மு லு க ல் | ல ன க ‖ (ஓடனு) |

தாத்பரியம் :—ஓ வனிதைகளே! ஓடத்தை நடப்பிக்கும் காக்ஷியை இன்றைய தினம் பாருங்கள்! பெண்மணிகள் யமுனாநதியை யடைந்து, கிருஷ்ணனுடன் கூடி எல்லோரும் பார்க்க ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும்,

சிலர் ஹரிகீர்த்தனங்கள் பாடிக் கொண்டும், மற்றுஞ் சிலர் ஆனந்தமாக முத்தமிட்டுக் கொண்டும், சிலர் யமுனா தேவியை வேண்டிக் கொண்டும், மற்றுஞ் சிலரின் முத்தாரங்கள் ஆடிக்கொண்டும்,

சிலரின் கொங்கைகள் அசைந்து கொண்டும், மற்றுஞ்சிலரின் ஜரிகை வஸ்திரங்கள் நழுவிக் கொண்டும், சிலரின் அழகான கூந்தல்கள் ஆடிக்கொண்டும், மற்றுஞ் சிலர் கிருஷ்ணனின் லீலைகளைச் சொல்லிக்கொண்டும்,

சிலர் தியாகராஜனுடைய நண்பனிவனெனவும், மற்றுஞ் சிலரின் கஸ்தூரி பொட்டுக்கள் கரைந்து கொண்டும், சிலர் அணிந்து கொண்டிருந்த புஷ்பங்கள் உதிர்ந்து கொண்டும், மற்றுஞ் சிலரின் கங்கணங்கள் கல்கல்லெனவும், (இவ்வாறாக ஓடத்தை நடத்தினார்கள்.)

வசனம் :— பெண்மணிகளெல்லோரும் ஜலக்ரீடை செய்யும் சமயத்தில் தங்களை யலங்கரித்துக் கொண்ட தெவ்வாறெனில் :—

ஸீஸ பத்யம் :—

1. பன்னீரு கந்தமுல் - பணதுலந்தரு மேன | பாகுகா னலதிரி - பாவுகமுக
மல்லெல மோல்லல - மருவம்பு ஜாஜுல | ஹாரமுல் தரியிஞ்சி - ரபல லபுடு

வரமைன ஸாம்ராணி - வத்துலு நிலிபிரி | திவ்யமேள கஸ்தூரி - தித்துகோனிரி
அலு குவக்கலு தேல்ல - டாகுவஜாபத்ரி | ஜாஜிகாயல ஜேர்ச்சி - ஜாணலேல்ல
விடியமுலு ஸேஸி வேலஸிரி வேட்கமீர | ஸ்வர்க்கபோகம்புலிவியஞ்சு ஸ்வாந்த
பரகனுனந்தமுன பாடபாடகோண்டு | ஓடனதிப்ரேமஜரிபிரி யுவதுலபுடு. [முனனு

தாத்பரியம் :—அச்சமயம் யௌவனவதிகளான கோபிகைகள் தேகத்தின் பேரில் பன்னீர் சந்தணத்தை நன்றாகப் பூசிக்கொண்டு, மல்லி, முல்லை, ஜாஜி, மருவு முதலியவைகளால் தொடுக்கப்பட்ட ஹாரங்களைத் தரித்து கொண்டு, சிறந்த ஸாம்பிராணி வத்திகளை ஏற்றிவைத்து, திவ்வியமான கஸ்தூரி திலகங்களையணிந்து கொண்டு நல்ல வெற்றிலை பாக்குடன் ஜாதிபத்ரி, ஜாதிக்காய் முதலிய வாசனை திரவியங்களைச் சேர்த்து, அதிக வேடிக்கையாக வடையங்கள் சுற்றி, மனதிற்குள் இதே ஸ்வர்க்கபோகமென்று நினைத்து, ஆனந்தம் பொங்கி பாட்டு பாடிக்கொண்டே, வெகு பிரேமையுடன் ஓடத்தை நடத்தினார்கள்.

வசனம் :—அச்சமயம் கோபிகாமணிகள் கிருஷ்ண பிரம்மானந்தாவேசம் கொண்டவர்களாய் என்ன சொல்லுகிறார்களென்றால் :—

## 7. "தனயந்தே ப்ரேம"

**20.** பைரவிராகம்—சாபுதாளம் { ஸரிகமப*தநிஸ் / ஸ்நிதபமகரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| ஸ ஸா ஸ க ரி க | ம ப ம ப த பா | நீஸ்ஸாரிஸ்நீ நிதபா | ககமபாம க ரி கா,ஸ |
| த ன யந் . தே. | ப்ரே . . ம . ய | னு சு . . . வி . ரி | போ. . . . ணு . வு . . |
| ஸ ரீ ஸ நி தா | நி ஸா ரி க ம ப | ப ம கா ; ரீ ; | ரி கா ஸா ; \|\| |
| த ல தே . லி | ய க ளு . . . | டே . . : ரு . | . . . . . \|\| |
| | அனுபல்லவி | | |
| ப மா பா தா | நீ , ஸ்ா ரீ | க் ரீ ஸ்ா ரீ | ஸ்ா நி நி த பா |
| அ ன ய மு | மோ . ஹ மு | மீ . ர க | கிரு ஷ்ணு . டு |
| ப தா ரீ ஸ்ா | ஸ் ஸ் நி நி த பா | ஸ் ஸ் நி நி த பா | ககமபாம க ரி கா,ஸ |
| அந் . த ரி | கன் . . னி . ரு | ப மு . லே. த்தி | யா.. . . . . டு . . (தன) |

| | | | |
|---|---|---|---|
| | சரணங்கள் | | |
| 1. பா , ப த பா | ப ப ம பா தா | நி நீ தா த நி | ஸ் ஸ் நி நி த பா |
| கோந் . த . ரி | பங் . . கா ரு | கோங். கு லு . | ப . . . . ட்ட |
| ம பா தா பா | ப ம கா ரீ ஸா | ரி கா மா மா | ப தா பா பா |
| கோந் . த ரி | ப . த மு லு | பா . கு க | நே . ட்ட . |
| ப மா பா தா | நி நீ ஸ்ா ரீ | க் ரீ ஸ்ா ரீ | ஸ் ஸ் நி நி த பா |
| கோந் . த ரி | ஸோ க ஸ ் னு | க னு லா ர | ஜ ு . . . . ட |
| ப தா ரீ ஸ்ா | ஸ் ஸ் நி நி த பா | ஸ் ஸ் நி நி த பா | க க ம பா ம க ரி கா, ஸ |
| கோந் . த ரி | ம ன . ஸ ் . தே | லி ஸி . மா . ட | லா. . . . . . ட . . (தன) |
| (மிச்ச | ச ர ண ங் க ளை யு ம் | இ தே ம ா தி ரி | பாடவும்) |
| 2. கோ ந் த ரி | ய ங் க மு | ன னு ப வ் வ | ளி ம் ப |
| கோ ந் த ரி | பே த வு ல | ப லு கே ம் பு | லு ஞ் ச |
| கோ ந் த ரி | த னு வு ல | க ர லீ ல | ஸே யு |
| கோ ந் த ரி | வெ ன க நி | லி சி ஜ ட | வே ய ‖ (தன) |
| 3. கோ ந் த ரி | நு து ட க | ஸ் தூ ரி பொ ட் டு | பெ ட் ட |
| கோ ந் த ரி | த ளு கு சே | க் கு ல மு த் து | பெ ட் ட |
| கோ ந் த ரி | பா லி ண் ட் ல | ப ன் னீ ரு | ஜி ல் க |
| கோ ந் த ரி | தோ . தி யா க | ரா ஜ . னு | து டு . ப ல் க ‖ (தன) |

தாத்பரியம்:—எல்லா ஜீவராசிகளுக்கும் சுகத்தைக் கொடுக்கும் கிருஷ்ண பரமாத்மா, மோஹம் மேலிட்டு ஒவ்வொரு கோபிகைக்கும் ஒவ்வொரு தனி ரூபமெடுத்து ஆட, கோபிகைகளில் ஒவ்வொருவரும் தன்னிடத்திலேயே கிருஷ்ணன் பிரேமை கொண்டிருக்கிறனென்று கருதி, தலைதெரியாமல் ஆடத் தொடங்கினர்கள்.

சிலரின் ஜரிகை சேலைகளைப் பிடித்திழுக்கச் சிலரின் கால்களை தனது கால்களால் தள்ள, சிலரின் ரூபலாவண்யத்தைக் கண்ணாரப் பார்க்க, சிலரின் மனோபாவத்தை யறிந்து தக்கவாறு வார்த்தையாட,

சிலருடைய தொடையின்மீது சயனித்து இளைப்பாற, சிலருடைய உதடுகளின் மீது சிவந்த வர்ணத்தை அதிகமாகப் பூச, சிலரோடு வேடிக்கையான லீலைகளைச் செய்ய, சிலருக்குப் பின்புறத்தில் நின்று தலை பின்ன,

சிலர் நெற்றியில் கஸ்தூரி பொட்டு இட, சிலரின் பளிங்கைப்போன்ற கன்னத்தில் முத்தமிட, சிலரின்மேல் பன்னீரைத் தெளிக்க, மற்றுஞ் சிலரோடு தியாகராஜனால் துதிக்கப்பட்ட கிருஷ்ண பரமாத்மா பேச, (கோபியர்கள் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கினவர்களாய்த் தலைகால் தெரியாமல் ஆடினார்கள்.)

வசனம் :—

அச்சமயத்தில் பிரம்மேந்திராதி தேவர்களெல்லாம் என்ன செய்கிறார்களென்றால்:—

கந்த பத்யம் :—

15. வனிதல ஹ்ருதயமு கனுகோனி - கனஸரஸக்ரீட ஸல்பு கருணாநிதிபை
கனக குஸுமவர்ஷமுலுக - கனவானலு குரியஜேஸி காஞ்சிரிப்ரேமன்.

தாத்பரியம் :—

வனிதைகளுடைய மனோபாவத்தை யுணர்ந்து, பெரிய ஸரஸக்ரீடை செய்ய நினைத்த கருணாநிதியாகிய கிருஷ்ண பரமாத்மாவின்மேல், தேவதைகள் கனக புஷ்பமாரியை வர்ஷித்து, கிருஷ்ணபரமாத்மா செய்யப்போகும் லீலையை ஆகாசத்தினின்றும் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

வசனம் :—

அந்த சமயத்தில், கர்வங்கொண்ட வனிதைகள் யௌவன மதாந்தகாரர்களாய் என்ன செய்கிறார்களென்றால் :—

சம்பகமாலை :—

1. குசமுலபை ஜெலங்கெடி து - கூலமுலன் பிகியிஞ்சி புஷ்பமுல்
கசமுலலோ தரிஞ்சுசுனு - காந்தலு கோலல பட்டி கிருஷ்ணுதோ
வசனமுலாடுசுன் மலய - வாதமு வீவக கர்வசைல மெக்
குசு ஸுமபாண லீலலனு - கூரிமி பாடுசு நோடத்ரோயகன்.

தாத்பரியம் :—

அப்பொழுது கோபியர்கள், மார்பின்மீதிருந்த புடவையை இறுக்கிக்கொண்டு, புஷ்பங்களைக் கூந்தலிலணிந்துகொண்டு, துடுப்புகளைக் கையிலெடுத்து, கிருஷ்ணபரமாத்மாவுடன் ஸம்பாஷணை செய்துகொண்டே, சுகமான தென்றற்காற்று வீச, கர்வமென்னும் பர்வதத்திலேறி, பிரியத்துடன் மன்மத லீலைகளை நன்றாய்ப் பாடிக்கொண்டே ஓடத்தைத் தள்ள ஆரம்பித்தார்கள்.

# 8. "ஏ நோமு நோசிதிமோ"

ஓடப்பாட்டு]

8. புன்னாகவராளிராகம்—ரூபகதாளம் {நிஸரிகமபதநி / நிதபமகரிஸநி}

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| பா த ப ப ம | கமபா - பமகாரீ நீ | ஸ ரி க ரி ஸா | ஸ ஸ ரி ஸ நீ |
| ஏ நோ . மு . | . . . . . . . . | நோ . சி தி மோ | சே லு ல . . |
| க ரி க ம பா | த நீ த ப ம க ரி | ஸ ரி க ரி ஸா | ; ; ; \|\| |
| மே . தா . ன | . . . . . . . . | மோ ஸ கி தி மோ | . . . \|\| |
| | அனுபல்லவி | | |
| பா த ப ப ம | கமபா - பமகாரீ நீ | ஸ ரி க ரி ஸா | ஸ ஸ ரி ஸ நீ |
| ஸ்ரீ நா . து . | . . . . . . . . | கோ லு வ ம ரே | சே லு லு . . |
| ; க ரி க ம பா | த நீ த ப ம க ரி | ஸ ரி க ரி ஸா | ; ; ; |
| . ச . க்கிள் ளு | . . . . . . . . | ஞெ . க்கு சு னு | . . . |
| கா ம ம க ரி | கா ம ம க ரி | க க ம ப த ப | மாபபமகரிஸா |
| மா ன க மோ . | வா னு சு சங் . | த்ரா . ன னு ஹ்ரு த | யா ன னு . . ஞ் ச |

| | | |
|---|---|---|
| காமமகரி-காமமகரி | க க ம ப த ப - மாபபமகரிஸா \|\| | (ஏநோமு) |
| மானகமோ. வானுசுசங். | த்ரா. ன னுஹ்ருத யானனு. . . ஞ்ச \|\| | |

| | | | |
|---|---|---|---|
| | சரணங்கள் | | |
| 1. பா த ப ப ம | கமபா பமகாரீ நீ | ஸ ரி க ரி ஸா | ஸ ஸ ரி ஸ நீ |
| ஸ்த்ரீ ர . த்ன . | . . . . . . . . | மு லு ம ன மு | சே லு லு . . |
| க ரி க ம பா | த நீ த ப ம க ரி | ஸ ரி க ரி ஸா | ; ; ; |
| ஸ்ரீ . மி . ஞ்சு | . . . . . . . . | யௌ . வ ன மு | . . . |
| பா த ப ப ம | கமபா பமகாரீ நீ | ஸ ரி க ரி ஸா | ஸ ஸ ரி ஸ நீ |
| வா ரி . ஜ . | . . . . . . . . | லோ . ச னு டு | சே லு ல . . |

| | | | |
|---|---|---|---|
| க ரி க ம பா | த நீ த ப ம க ரி | ஸ ரி க ரி ஸா | ; ; ; |
| பா . லா . யே | . . . . . . . | க த வம் . மா | . . . |
| கா ம ம க ரி | கா ம ம க ரி | க க ம ப த ப | மா ப பமகரிஸா |
| கோ ரி க லீ . | டே ரே ணு ய து | வீ . ரு ணி க னு | லா ர ஜு... ட |

| | | |
|---|---|---|
| காமமகரி-காமமகரி | ககமபதப-மாபபமகரிஸா \|\| | (ஏநோமு) |
| கோரிகலீ . டேரேணுயது | வீ. ருணிகனு லா ரஜு... ட \|\| | |

| | | | |
|---|---|---|---|
| 2. ப ங் கா ரு | . . . . . . . | ஸோ ம் மு ல னு | சே லு லு . |
| பா கு க | . . . . . . . | பெ ட் டு கோ னி | . . . . . . . |
| ச் ரு ங் கா ரா | . . . . . . . | ம் ப ர மு ல னு | சே லு லு . |
| சே லு வொ ங் த | . . . . . . . | க ட் டு கோ னி | . . . . . . . |
| ஸ ங் க தி கா | ன ங் க மு லு சு | பா ங் கு னி கி ஞெ | ஸ ங் க க ம ன \|\| (மே நோமு) |
| 3. போ ங் கா ரு | . . . . . . . | யீ ந தி லோ | சே லு லு . |
| போ ந் து கா | . . . . . . . | கு மி கூ டி | . . . . . . . |
| ம ங் க ளா | . . . . . . . | கா ரு னி தோ | சே லு லு . |
| ம ன ஸா ர | . . . . . . . | கூ டி தி மி | . . . . . . . |
| ர ங் க ப தி - யு | ப் போ ங் கு சு ம ன | சே ங் க ட னு சே | ல ங் க க ம ன \|\| (மே நோமு) |
| 4. வா கீ சா | . . . . . . . | த் ய ம ரு ல கு | சே லு லு . |
| வ ர் ணி ம் ப | . . . . . . . | த ர மௌ னே | . . . . . . . |
| தி யா க ரா | . . . . . . . | ஜா . ப் து னி தோ | சே லு லு . |
| போ க மு | . . . . . . . | ல ந் து சு னு | . . . . . . |
| பா கு க த மி | ரே க னு ந ய | ரா க மு லீ | லா கு பா ட \|\| (னே நோமு) |

தாத்பரியம் :—தோழிகளே ! நாம் என்ன நோன்புகளை நோற்றோமோ ! பூர்வ ஜன்மத்தில் என்ன தானங்களைச் செய்தோமோ ! (நமக்கு இந்த பாக்கியம் இன்றைக்குக் கிடைத்திருக்கிறது).

ஸ்ரீநாதன் கொலுவிற்றிருக்கிறான். கன்னத்துடன் கன்னத்தைச் சேர்த்து

வைத்து பூர்ண சந்திரனைப்போன்ற முகத்தையுடையவனை விடாமல், ஹ்ருதயத்தில் வைத்துக்கொள்ள, (என்ன நோன்பு நோற்றோமோ)

தோழிகாள்! ஸ்திரீ ரத்னங்களான நமக்குப் பெருகும் யௌவனம். இச்சமயத்தில் தாமரைக் கண்களை யுடையவன் நம் வசமானானல்லவா? நமது கோரிக்கைக ளீடேறின. யதுவீரனைக் கண்ணாரப்பார்க்க, (என்ன நோன்பு நோற்றோமோ)

ஸகிகாள்! தங்க நகைகளை யணிந்துகொண்டு, ச்ருங்காரமான வஸ்திரங்களை அழகாக தரித்துக்கொண்டு, ஆனந்தத்துடன் நம் சரீரத்தைக் கிருஷ்ண பரமாத்மாவுக் களிக்க, (என்ன நோன்பு நோற்றோமோ)

பாங்கியர்காள்! பொங்கும் இந்நதியில் நாம் பொருத்தமாக பரமாத்மாவுடன் மனஸார கூடினோம். ரங்கபதி ஸந்தோஷமாக நம் அருகில் இருக்க,
(என்ன நோன்பு நோற்றோமோ)

பாங்கிமாரே! வாகீசர் முதலான தேவர்களால் வர்ணிக்க முடியுமா? தியாக ராஜாப்தனுடன் குதூஹலமாக போகங்களை அனுபவித்துக்கொண்டு ரக்திராகங்களை இவ்வாறு ப்ரேமை மீற பாட நாம், (என்ன நோன்பு நோற்றோமோ)

**வசனம்:**—அச்சமயம் கோபிகா மணிகளின் மனோபாவத்தை யறிவதற்காக கிருஷ்ண பரமாத்மா பின்வருமாறு சொன்னார்:—

**சம்பகமாலை:—**

2. குஸுமபு வாஸனல் விஸர - கோகில நாதமுலிந்து ம்ரோயகா
கோஸருசு மிம்மு வேடுசுனு - கோர்கெலு தீர்பனு நா ஸரேவ்வரே
யஸத்ருசமைன மீ ஸோகஸு - லப்ஜ பவாதுலகைன கல்குனே
மஸலக சில்ககோலலனு - மாடிகி பச்சிம திக்கு னுஞ்சரே.

**தாத்பரியம்:**—கோபியர்களே! புஷ்பங்களினின்று தோன்றும் ஸுகந்த பரிமள வாசனைகள் எங்கும் வீச, கோகிலத்தின் மதுரமான நாதம் முழங்க, உங்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்:— உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற எனக்குச் சமானம் யார்? நிகரற்ற உங்கள் அழகு பிரம்மாதிகளுக்கும் கிடைக்குமா? தாமதம் செய்யாமல் துடுப்புகளை நீங்கள் மேற்குப் பக்கமாகப் போடுங்கள்.

**வசனம்:**—அப்பொழுது வனிதைகள் கிருஷ்ணனின் வார்த்தைகளைக் கபடார்த்தம் செய்துகொண்டு என்ன சொல்லுகிறார்க ளென்றால்.—

**கந்த பத்யம்:—**

16. ஸோகஸுல கேமீ நினு நம் - மகரா தபகீர்த்திகாதே மஹிலோபல நீ
வகலெல்ல கட்டி பெட்டுமு - நகதர மாவத்தனிங்க நடவது ஸும்மீ.

**தாத்பரியம்:**—கோவர்த்தனகிரியைத் தாங்கின ஓ கிருஷ்ணா! எங்கள் ஸொகஸைப் பற்றி உனக்கென்ன? உன்னை நம்பக்கூடாது என்பது இவ்வுலகில் பிரசித்தமல்லவா? துடுப்புகளை மேற்குப்பக்கம்போட, அதின் காரணமாக ஓடம் பிரவாகத்தில் போகும்படி செய்ய நினைத்த உனது தந்திரங்கள் இங்கு நடவாது. உன் விஷமங்களைக் கட்டிவை.

# 9. “சாலு சாலு நீ”

15. ஸாவேரிராகம்—சாபுதாளம் { ஸரிமபதஸ் / ஸ்நிதபமகரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| 1. , ரீ ஸ்ா ஸ்ா<br>. சா லு சா | ஸ் நிதா; பமபத<br>. . லு . நீ . . . | ம ப ம பா தா<br>யு . . க்து லு | பாதபமா தப தா<br>ந ட . . வ . து |
| 2. , ரீ ஸ்ா ஸ்ா<br>. சா லு சா | ஸ் நிதா; பமபத<br>. . லு . நீ . . . | ம ப ம பா தா<br>யு . . க்து லு | பாதபமா கரிரீ<br>ந ட . . வ . து |
| , ஸ ரி க ரி ரீ<br>. ஸா . ர .ஸா | , ஸா ரி ம ப த<br>. க்ஷ ஸ்ரீ . . . | ம ப ம பா தா<br>கிரு . . ஷ்ணு . | பா தபமா கா , ரி<br>. . . . . . . .<br>ரீ , ஸா ; \|\|<br>. . . . . \|\| |
| | அனுபல்லவி | | |
| ப மா பா தா<br>சூ . ல த | ஸ்ா , ஸ்ா ஸ்ா<br>ரா . து ல | ஸ் ரி க் க் ரி ஸ்ா<br>க ரு . தை . ன | ஸ்நிஸ்ா,நி தப தா<br>ம . மு . . கூ . டி |
| ப தா ரீ ஸ்ா<br>ஸா க மு ல | ம ப ம பா தா<br>னு ப . விம் ப | பாதபமா கரிரீ<br>வே . . . ஸ்ரீ . . | ரிகரி ரிமபத \|\|<br>கிரு . . ஷ்ணு . . . \|\|<br>(சாலு) |
| | சரணங்கள் | | |
| 1. ரி மா த ப தா<br>அ த ர . ர | ம ப ம பா தா<br>த ன . மு ல | ம ப ம பா தா<br>க னி . ஸோ . | பா தபமா கரிரீ<br>க்கு சு . . மே . மு |
| ரீ , மா மா<br>ஆ . சிஞ் சி | பா , த நி த ப<br>வ . ச்சி . தி . | தா , ; ;<br>மி . . . . | த ப ம பா ;<br>. . . . . . . |
| ப தா ஸ்ா ;<br>பு த ர . | ஸ் ஸ்ா ஸ்ா ஸ்ா<br>க்ஷ க சல் ய | ஸ் ரீ க் ரி ஸ்ா<br>ஸா . ர . த்ய | ஸ்நிஸ்ா,நி தப தா<br>மோ.ன . . ரிஞ் சி |
| பதாரிரிஸ்ா<br>போங்கே . த | ம ப ம பா தா<br>ரு க . மை தி | பாதபமா க ரிரீ<br>மி . . . ஸ்ரீ . . | ரிகரிரிமபத \|\|<br>கிரு. .ஷ்ணு. . . \|\|<br>(சாலு) |
| 2. கண்டசக்<br>காமிஞ்சி | கரவண்டி<br>வச்சிதி | பலுகுலு<br>மி . . . | வினிமேமு<br>. . . . . |

| | | | |
|---|---|---|---|
| உ ண் டி யு ண் | டி பா லு | னி கி ல் லி | ம ரி தோ ட் ல |
| ஞுசே தே | ரு க மை தி | மி . . ஸ்ரீ . . | கி ரு ஷ் ண . . \|\| (சாலு) |
| 3. தி யா க ரா | ஜ னு து ட | னி . ய தி | ப் ரே ம தோ |
| த ரு ணு லு | வ ச் சி தி | மி . . . | . . . . |
| போ கி ச | ய ன மா | மா ட லு | மீ ர கு |
| பு த் தி சா | லி வெள து ஸு | மி . ஸ்ரீ . | கி ரு ஷ் ண . . \|\| (சாலு) |

தாத்பரியம் :—தாமரைக் கண்களையுடைய ஓ கிருஷ்ணா! போதும், போதும். இனி உன்னுடைய யுக்திகள் இங்கே செல்லாது.

ஈச்வராதிகளுக்கும் கிடைத்தற்கரிதான எங்களைக் கூடி நீ ஸுகமனுபவிப்பாய்!

உன்னுடைய அழகிய உதடுகளையும், பல் வரிசைகளையும் பார்த்துப் பிரமித்து ஆசைகொண்டு வந்தோம். சான்றோர்களை ரக்ஷிப்பவனே! சல்லியன் ஸாரத்யம் செய்ததைப்போல் நீ செய்வாயென்று தெரிந்து கொள்ளாமற்போனோம்.

கற்கண்டைப் போன்ற உனது இனிய மொழிகளைக் கேட்டு, நாங்கள் ஆசைப்பட்டு வந்தோம். இருந்திருந்து குழந்தையை மெள்ளக் கிள்ளிவிட்டு, மீண்டும் தொட்டிலாட்டுவதைத் தெரிந்து கொள்ளாமற் போனோம்.

பரமசிவனால் போற்றப்பட்டவனென்று அதிக ப்ரேமையுடன் யௌவனவதிகளாகிய நாங்கள் நம்பி வந்தோம். அரவத்தின்மீது பள்ளிகொண்டவனே! எங்களுடைய வார்த்தைகளை மீறவேண்டாம். புத்திசாலியாக நடந்துகொள்வாய்!

வசனம் :—அப்பொழுது கோபிகாமணிகள் தங்களது ரூபஸௌந்தரியத்தினாலும் யௌவனத்தின் மதகர்வத்தினாலும் ஆத்ம சந்தோஷமடைந்து என்ன சொல்லுகிறார்களென்றால் :—

கந்தபத்யம் :—

17. லஞ்ஜலு ஸுரபதி ஸபலோ - குஞ்ஜர தனுஜாரி ஸபலோ *கோலுசு கணம்புல்
கஞ்ஜஜு ஸபலோ யதுலனி - மஞ்ஜுளமுகு லாடுகோனிரி மாதவு ஸபலோ.

தாத்பரியம் :—தேவேந்திரனுடைய ஸபையில் அப்ஸர ஸ்திரீகளும், பரமசிவனுடைய ஸபையில் பிரமத கணங்களும், பிரம்மதேவனின் ஸபையில் முனிபுங்கவர்களும் இருக்கிறார்கள். ஆனால் உனது (கிருஷ்ணனுடைய) ஸபையிலோ மனதைக் கவரும் அழகிய முகத்தையுடைய கோபிகைகளிருக்கிறார்கள்!

வசனம் :—அப்பொழுது கிருஷ்ண ப்ரம்மானந்தா வேசத்தினால் பரவசமடைந்து க்ரீடை செய்யும் ஸமயத்தில், அப்ஸர ஸ்திரீகள் என்ன செய்கிறார்களென்றால் :—

* குதன கணம்புல், குணப கணம்புல்.

# 10. "சூதாமு ராரே"

**22.** (கர்னுடக) காபிராகம்—சாபுதளம் { ஸரிகாமபதநிஸ் / ஸ்நிதபமகமரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| ப தா தா பா | பா , ப ம பா | ம பா தா பா | ம ம க ரி ஸ ரீ |
| சூ . தா மு | ரா . . . ரே | ஈ . . . | வே . . ட்க . னு |
| ஸ ரீ ஸா ஸா | நி தா தா தா | ஸ ரீ ரி மா க | ரீ , ரி ஸ ஸா ‖ |
| ஸா த து லா | . ர ஙே . | டு . . . . | . . . . . ‖ |
| | அனுபல்லவி | | |
| | | | ஸா ஸா |
| | | | பு ரு |
| மா , பா தா | ஸ்ா , ஸ்ா ரீ | ரி ம்ா ரீ ஸ்ா | த ஸ்ா த ப தா |
| ஹோ . தா து | ல . க ரு | தை . ன ஈ | ஓ . ட . லோ |
| த ரீ ரீ ஸ்ா | த பா மா பா | ப தா தா பா | ம ம க ரி ஸ ரீ ‖ |
| யு வி த லெல் | . ல ஹ ரி | னி . கூ டி | யா . . டே . ரு ‖ |
| | சரணங்கள் | | |
| 1. ப தா தா பா | ப பா ப ம பா | ம பா தா பா | ம ம க ரி ஸ ரீ |
| ஒ க ரி கோ | க ரு கங் . . | த மு ன ல | தே . . . . ரு |
| ரி மா கா ரீ | ஸ ஸா த பு தா | ஸ ரீ மா பா | ப தா தா பா |
| ஒ க ரி கோ | க ரு தி . ல | க மு தி . | த்தே . . ரு |
| ப மா பா தா | ரி ஸ்ா ரீ ; | ரி ம்ா ரீ ஸ்ா | த ஸ்ா த ப தா |
| ஒ க ரி கோ | க ரு வி . | ட முலோ ஸ | கே . . . ரு |
| த ரீ ரீ ஸ்ா | த பா ப ம பா | ப தா தா பா | ம ம க ரி ஸ ரீ ‖ |
| ஒ க ரி கோ | க ரு ஹா . . | ர மு வே . | ஸே. . . . ரு ‖ |
| (இதே | மாதிரி மிச்ச | சரணங்களையும் | பாடவும்) |

| | | | |
|---|---|---|---|
| 2. ஒ க ரி கோ | க ரு வ லு | வ லு க ட் | டே . . . ரு |
| ஒ க ரி கோ | க ரு ர வி | கே லு தோ டி | கே . . . ரு |
| ஒ க ரி ஞெ | க ரு கௌ | கி ட கூ ர் | சே . . . ரு |
| ஒ க ரி கோ | க ரு த ம | லோ . ஸோ க் | கே . . . ரு ‖ |
| 3. ஒ க ரி கோ | க ரு பா | ட லு பா . | டே . . . ரு |
| ஒ க ரி ஞெ | க ரு ஸ ர | ஸ மு லா | டே . . . ரு |
| ஒ க ரி ஞெ | க ரு ஹ ரி | ய னி ஜூ . | சே . . . ரு |
| ஒ க ரி ஞெ | க ரு கா ன | க . ப் ர ம | ஸே . . . ரு ‖ |

**தாத்பரியம் :**—ஸௌந்தரிகளே ! வாருங்கள், இன்றையதினம் நாம் இந்த வேடிக்கையைப் பார்க்கலாம்.

இந்திராதிகளுக்கும் கிடைத்தற்கரிதான பாக்கியத்தைப் பாருங்கள் ! ஓடத்தில் யௌவனவதிகளெல்லாம் ஹரியுடன்கூடி விளையாடுகிறார்கள்.

ஒருவர்க்கொருவர் சந்தணம் பூசிக்கொண்டும், ஒருவர்க்கொருவர் (நெற்றியில்) பொட்டிட்டுக்கொண்டும், ஒருவர்க்கொருவர் தாம்பூலம் கொடுத்துக்கொண்டும், ஒருவர்க்கொருவர் மாலை போட்டுக்கொண்டும்,

ஒருவருக்கொருவர் புடவை கட்டிக்கொண்டும், ஒருவருக்கொருவர் ரவிக்கை போட்டுக்கொண்டும், ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்துகொண்டும், ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளேயே பிரமையடைந்துகொண்டும்,

ஒருவர்க்கொருவர் பாட்டு பாடிக்கொண்டும், ஒருவரோடொருவர் ஸரஸஸல்லாபமாடிக்கொண்டும், ஒருவரையொருவர் ஹரியாகப் பார்த்துக்கொண்டும், ஒருவரை மற்றொருவர் காணாமல் பிரமையடைந்துகொண்டும்,

இவ்வாறு பலவிதமாக ஓடத்தில் நடந்து கொண்டிருக்கும் காக்ஷிகளை ஆகாயத்தினின்று தேவஸ்திரீகள் பார்த்துத் தமக்குள் தாமே வியந்துகொண்டிருந்தார்கள்.

**வசனம் :**— இவ்வாறு அப்ஸரஸ்திரீகளெல்லாம் ஓடத்தில் நடக்கும் வேடிக்கைகளைக்கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்க, கோபிகாமணிகள் மிக்க சௌந்தரியத்தினால் தமக்குச் சமானமெவருமில்லையென மமதையடைந்து என்ன கூறுகிறார்களென்றால் :—

**கந்த பத்யம் :—**

18. **ஹரிஹர கமலபவாதுலு - நரஸுர சிம்புருஷுலெல்ல னம்ருலுகா கேவ்**
**வரு மன குசகச வதனு - தரமுலகனி தப்புவாரு தரலோ னனுசுன்.**

**தாத்பரியம் :**—கோபிகைகளே ! பிரம்ம விஷ்ணு மஹேச்வரர்களும், மனிதர்கள் தேவர்கள் கிம்புருஷர்கள் முதலானோர்களும் நம்மிடத்தில் வசப்பட்டவர்களாக, நம்முடைய கொங்கையழகையும், கூந்தலழகையும், மேனி உதடுகளின் அழகையும் பார்த்து, மயங்காது தப்புவோர்களும் இவ்வுலகில் உளரோ ? யென்றார்கள்.

**வசனம் :**— மீண்டும் இவ்வாறு சொன்னார்கள் ;—

# 11. "எவரு மனகு"

29. தேவகாந்தாரிராகம்—ஆதிதாளம் { ஸரிமபதஸ் / ஸ்நிதபமகரிஸ }

| \| 4 | ○ | ○ |
|---|---|---|
| பல்லவி | | |
| 1. ; தா, ரிஸ்ா ஸ்ா, நிதா தா நிதபா | மாபம பத ததபா | தப மா,க ரிமப த |
| . எ . வ ரு ம . . ன கு . . ஸ | மா . . . . . . ன | மி . ல . . லோ . . . |
| 2. தா-தா, ரிஸ்ா ஸ்ா, நிதா தா நித பா | மாபமபத ததபா | தப மா, க. கரிரீ |
| . எ . வ ரு ம . . ன கு . . ஸ | மா . . . . . . ன | மி . ல . . லோ . . |
| 1. ; ரீ ஸா , நி தா தா தா ஸா ரீ | ரி மா க ரீ ; | தத பா மா, க ரீ |
| .ணிந் து . . லா . ர நே . | டு . . . . . | இ . ல லோ . . . |
| 2. ; ரீ ஸா , நி தா தா தா ஸா ரீ | ரி மா க ரீ ; | ஸரிகாஸரிஸா; \|\| |
| .ணிந் து . . லா . ர நே . | டு . . . . . | . . . . . . . . \|\| |
| அனுபல்லவி | | |
| ; ப தா பா , த ப மா , க கரிரீ | ; ரி மா பா த | தா தா தா ; |
| . அ வ னி . ஹ . ரி . . ஹ . ர | . ப்ரம் . மா தி | ஸ ரு வு . |
| ; தா , ரிஸ்ா ஸ்ா, நிதா தா நிதபா | தப மா, க கரிரீ | ; ரி மா ப தா \|\| |
| . ஆ . ஸ சே மோ . . . . . . ஸ | போ. . . . யி . ரி | . க னு க னு \|\| |
| | | (எவரு) |
| சரணம் | | |
| ; ப த பா பா பா பா பா ; | ; ம பா த பா | தப மா, க கரிரீ |
| . ந லு வ த ன ய பை . | . மோ . ஹ மு | ஜெங் . . . . . தி |
| ; ரி ரி மா , க க ரீ , ரீ ஸா | ஸா, நி தா ரிஸ ரீ | ரி மா க ரீ ரீ ஸா |
| . நா . டே . . . . . . . த | கி . . லி போ. . | யி . . . முத் து |
| ; ப த பா ; பா ; பா பா | மபதஸ் ஸ் நி தா நி த பா | தப மா, க கரிரீ |
| . லோ லு கு . ஸ்ரீ . ஹ ரி | வ.ல. சு . . சு . . | ப்ருந். . . . . . தா |

| \| 4 | O | O |
|---|---|---|
| ; ரி ரி மா , க க ரீ , ரீ ஸா<br>. லோ . லு . . ை. . . . | ஸா , நிதா ரிஸ ரீ<br>போ . . . . . . | ரீ ; ஸ ரி ஸா<br>யே . . . . |
| ; ப த பா பா ; த ப ம க ரீ<br>. சி லு வ பூ . ஷ . ணு . டு | ; ரீ , ம பா<br>. தா . ரு கா | தா தா தா ;<br>வ ன பு . |
| தப-தரிஸ்ா ; ஸ்ா , நிதா தஸ் தஸ்ரீ<br>. . சேலு ல . பா . . . லா . . . . | ஸ்ா ; ; ;<br>யே . . . | ; ; ; ஸ்ா<br>. . . . கோ |
| ; ஸ் நி தா ; ஸ் ரீ ரி ம்ா க் க் ரி ரீ<br>. கு . ல . மு ன தியா . . . . க | ; ஸ்ரிக்ா ஸ்ரிஸ்ா<br>. ரா . . ஜ . னு | ஸ் நி தா , ரி ஸ்ா<br>து . டு . ம ன |
| ; த ரி ஸ்ா ; ; ஸ் நி த த பா<br>. வ ல லோ . . த . கி . லி | ; த ப ம க ரீ<br>. போ . . . யே | ; ரி மா ப தா \|\|<br>. க னு க னு \|\| (எவரு) |

தாத்பரியம் :— நாரீரத்னங்களே! இன்று நமக்குச் சமானமானவர்கள் இப்பூவுலகில் யாரிருக்கிறார்கள் ?

இவ்வுலகில் விஷ்ணு, சிவன், பிரம்மன் முதலான தேவர்களும் ஆசையினால் மோசம் போனார்கள்.

பிரம்மதேவன் தானே சிருஷ்டித்த (ஆகையினால் புத்திரிக்குச் சமானமான) நாமகள் மீது ஆசை கொண்டான். ஸ்ரீமந் நாராயணனே ஜலந்தரா ஸுரனின் மனைவியாகிய ப்ருந்தையின்மீது மோகங்கொண்டவனானான். ஸாக்ஷாத்காரனான பரமசிவனோ, தாருகாவன ஸ்திரீகளின் மீது காமங் கொண்டான். கோகுலத்தில் பரமாத்மாவான கிருஷ்ணன் நம் வலையில் சிக்கிக்கொண்டான். நமது பாக்கியமே பாக்கியம்.

வசனம் :—அச்சமயம் கோபஸுந்தரிகள் ரூபலாவண்ய கர்வத்தினால் மெய்மறந்து என்ன சொல்லுகிறார்களென்றால் :—

ஸீஸபத்யம் :—

2. பொங்குலாடேசு *பாக போகிம்ப நேர்சுனே | † வாடனு ஜரிபிம்ப வசமுகாது
வனிதல ஜூசிதே வலபிம்ப நேர்சுனே | வாடனு ஜரிபிம்ப வசமுகாது
மன ரூபமுல ஜூசி மனவெண்ட திருகுனே | வாடனு ஜரிபிம்ப வசமுகாது
‡ ஸோகஸு ஜேஸுகவச்சி ஸோக்கிம்ப நேர்சுனே | வாடனு ஜரிபிம்ப வசமு [காது

* ஸெஸ்ஸ  † ஓடனு ஜரிபிம்ப னெனரு லேது  ‡ ஸொகஸுன மனமுல

அனுசு பாவிம்ப *மாதவுடதி யெரிங்கி | கோப்பஸூடிகாலி பலுமேக கோஷணமுலு
வானகாடாந்த காரம்பு வாடலோன | த்வார மடு கல்கி நீருராதலசேனபுடு.

தாத்பரியம் :—

"கிருஷ்ணனுக்குத் திருட்டுத்தனமான வார்த்தைகளைச் சொல்லவும், ஸ்திரீகளுடன் கூடிக்குலாவவும் தெரியுமே தவிர, ஓடத்தை நடத்தத் திறமை கிடையாது. வனிதைகளைப் பார்த்தால் மோகம் வருமாறு செய்யத் தெரியுமே தவிர, ஓடத்தை நடத்தத் திறமை கிடையாது. நம் சௌந்தரியத்தைப் பார்த்து நம் பின்னால் சுற்றத் தெரியுமே தவிர, ஓடத்தை நடத்தத் திறமை கிடையாது. நன்றாக அலங்காரம் செய்துகொண்டு ஸ்திரீகள் மயங்குமாறு செய்யத் தெரியுமே யல்லாமல் ஓடத்தை நடத்தத் திறமை கிடையாது"

என்று கோபியர்கள் சொன்னதைக்கேட்ட மாதவன், கடுமையான சுழற் காற்றும், மேகங்கள் இருண்டு, இடி முழக்கத்துடன் கூடின மழையும் வர வேண்டுமென நினைத்தார். ஓடத்தில் துவாரம் உண்டாகி ஆற்றுநீர் உள்ளே பாயவேண்டுமெனவும் நினைத்தார்.

வசனம் :—

அச்சமயம், கோபஸூந்தரிகளின் மத கர்வத்தை அடக்கவேண்டுமென்று எண்ணின ஸ்ரீமத் கிருஷ்ணமூர்த்தியின் ஹ்ருதயத்தை யறிந்து, இந்திராதி தேவர்கள் என்ன செய்கிறார்களென்றால் :—

சார்தூலம் :—

6. பாகாரி ப்ரமுகுல் வினோதமுலு ஸல்ப ஞக்ஞகாவிம்பகா
ஞகாசம் புனனுண்டி வானவடகன் - ட்லா வேள வ்ராலென்மறின்
நௌகா ரந்த்ரமுலோ ஜலம்பு சோரகா - னத்யந்த வ்யாஸங்கலே
ஸ்ரீகாருண்யநிதே ஹரே யனி சேவுல் - சிந்திஞ்சி ரய்யோடலோன்.

தாத்பரியம் :—

இந்திராதி தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் வினோத எண்ணங்களை நிறைவேற்ற வெண்ணி, மேகங்களுக்கு ஆக்ஞை கொடுக்க, தக்ஷணமே ஆகாசத்தினின்று மழை பெய்ய ஆரம்பித்தது. ஓடத்தில் த்வாரம் உண்டாகி, அதன் வழியாக உள்ளே ஜலம் பாயத் தொடங்கிற்று. இதைப் பார்த்து வனிதைகள் திடுக்கிட்டு, வியாகூலமடைந்தவர்களாய் மனதில் கிருஷ்ண பரமாத்மாவைத் தியானம் செய்துகொண்டு "ஸ்ரீ காருண்ய நிதே! ஹரே!" யென பிரலாபித்தார்கள்.

வசனம் :—

அப்பொழுது கோபிகாமணிகள் மிக்க பயங்கொண்டவர்களாய் என்ன சொல்லுகிறார்களென்றால் :—

* மதிலோன னப்ஜமுகுடு

# 12. "உன்னதாவுன"

8. கண்டாராகம்—சாபுதாளம் { ஸக *ரிகமபநிஸ் / ஸ்நிதபமகரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| 1. மா , பா பா | ப பா ப த பா | ம மா பா ; | , ; ; ; |
| உன் . ன தா | வு ன ஞுண். ட | ணி . . . | . . . . |
| 2. மா , பா பா | ப பா ப த பா | மா , பா , ம | ம ம க க ரி ஸா |
| உன் . ன தா | வு ன ஞுண். ட | ணி . . . ய்ய | து . . வா . ன |
| நி நீ நீ ஸா | ஸ ஸா ஸ ப பா | ப மா , க க ரி ரீ | ரி ஸா ; ; \|\| |
| யு ரு மு ல | யி தே வே ன க | தி . . . . . ய்ய | து . . . \|\| |
| | சரணங்கள் | | |
| (சரணங்களைப் | பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. ஸூ டி கா லி | கீ யோ ட | ஜூ ட் டி | சு ட் டி |
| வ டி கா | ன ல லை தே | கோ ட் டி | . . . . \|\| |
| 2. ஓ ட லோ | ர ங் த் ர மு | க லி கே | . . ஈ |
| வ ணி த ல | கே வ் வ ரு | ஸ லி கே | . . . . \|\| |
| 3. க னு ல கே | ங் து க்ா ன | ரா து | . . க தி |
| கா ளி ங் தி | ம ன கி க | மீ து | . . . . \|\| |
| 4. ம தி போ வு | தா ரி போ யி | ர ம் மா | . . அ பு டே |
| ம த மி ங் த | வ த் த ண் டி | ன ம் மா | . . . . \|\| |
| 5. ம ன மோ க் க | சோ கூ ட | ரா து | . . ப் ர ள ய |
| மூ;ன னி தி | கா னி வே றே | லே து | . . . . \|\| |
| 6. ரா ஜ வ[illegible] | த ன லு ரா | ர ம் மா | . . தி யா க |
| ரா ஜ ஸ | கு ணி ஜூ ட | ர ம் மா | . . . . \|\| |

குறிப்பு:— இந்த பாட்டில் பல்லவியை ஒரு கோபிகையும், ஒவ்வொரு சரணத்தையும் ஒவ்வொரு கோபிகையுமாகப் பாடுகிறார்கள்.

தாத்பரியம் :—

ஓடத்தில் நாம் இருந்தவிடத்திலிருப்பது சரியன்று. மழையும் மேக கர்ஜனையும் வரவர அதிகரித்துக் கொண்டே வருகின்றன. விபரீதமான சுழற்காற்று ஓடத்தைச் சுற்றிச் சுற்றியடிக்கிறது. அக்காற்றின் வேகத்தினால் அலைகள்வந்து ஓடத்தின்மேல் மோதுகின்றன.

ஓடத்தில் த்வாரம் உண்டாயிற்றே! இந்த வனிதைகளுக்கு இனி ஸகாயம் செய்வார் யார்? இருளின் கடுமையினால் திக்குத்திசை யொன்றும் புலப்படவில்லையே! (ஆகையினால் ஓடத்தைக் கரையில் சேர்க்கலாமென்று எண்ணுவதற்குக்கூட இடமில்லையே). இனி காளிந்தி (யமுனா) நதியே நமக்குக் கதி! முன்னமேயே மனம் சென்ற பிரகாரம் ஓடத்தைத் தள்ளி ஆற்றின் நடுவிற்கு வந்துவிட்டமையினால் இந்த கஷ்டம் அனுபவிக்கும்படி நேர்ந்தது. முன்னமேயே நமக்கு இவ்வளவு கர்வம் வேண்டாமென்று சொன்னேனம்மா!

(புருஷர்கள் எவ்வளவு பேர்கள் வேண்டுமானாலும் ஓரிடத்தில் கூடலாமே தவிர) ஸ்திரீகளாகிய நாம் ஓரிடத்தில் கூடக்கூடாது. பிரளயமென்பது இதே யன்றி வேறில்லை. சந்திரவதனத்தையுடைய வனிதைகளே! வாருங்கள்! தியாகராஜனின் நண்பனான கிருஷ்ணனைப் பாருங்கள்!

வசனம் :— இவ்விதமாகப் பிரலாபித்துக்கொண்டே கிருஷ்ணனைச் சுற்றிக் கொண்டு கோபிகாமணிகள் என்ன சொல்லுகிறார்களென்றால் :—

சார்தூலம் :—

7. ஈ ராஜானனு னுடேகோன்ன பலமோ - யே மானினீ சாபமோ
ஈ ராமாமணுலேகுவேள குணமோ - யே வேல்பு துஷ்க்ருத்யமோ
வேறே தாரிகதோசதேயனி மதின் - வேமாரு சிந்திஞ்சுசுன்
நாரீ ரத்னமுலெல்ல ஜாலிபடுசுன்* - னுரீவகன் வாடலோ.

தாத்பரியம் :—

"சந்திரனைப் போன்ற முகத்தையுடைய கிருஷ்ணனைப்பற்றி நாம் சொன்ன வார்த்தைகளின் பயனோ, அல்லது எந்த ஸ்திரீ (எங்களுடைய சந்தோஷ நிலைமையைப் பார்த்துச் சகிக்காதவளாய்ப் பொறாமைகொண்டு) கொடுத்த சாபமோ, அல்லது நாம் புறப்பட்ட வேளையின் குணமோ, அல்லது எந்த தேவதையின் துஷ்கிருத்யமோ, (உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு) வேறே வழி யொன்றும் தோன்றவில்லையே!" என்று ஸ்திரீ ரத்னங்களாகிய கோபியர்கள் அவ்வோடத்தில் இவ்வாறு மனதில் அடிக்கடி சிந்தித்து விசனப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

வசனம்:—இவ்விதமாக கோபிகாமணிகள் துக்கஸாகரத்தில் மூழ்கினவர்களாய் கிருஷ்ணனுக்கு க்ஷேமம் உண்டாகும்பொருட்டு யமுனா தேவியைப் பிரார்த்தித்தார்கள்.

---

* நானாவிலாபம்புலன்.

# 13. "அல்ல கல்லோல"

தரு]
17.

ஸௌராஷ்டிரராகம்—ஆதிதாளம் { ஸரிகமபதநிஸ் / ஸ்நிதாபமகமரீஸ

| । 4 | O | O |
|---|---|---|
| பல்லவி | | |
| ஸரி காமப மப கமகரிஸ நி ஸரிகம | க ரி ஸா ; நி நி | நீ ஸா ரி ஸ ரீ |
| அல். ல . . . . கல்லோ.ல . மா .யே. | னம். ம . ய மு | ஞ தே வி . மா |
| ரிகமப மபகரி ஸநிஸரி காரிஸ | ஸா நி ஸ தா ; | ஸா ; ; ; ‖ |
| யார்து . லேல்ல. னு . தீர் . ப வம் . | மா . . . . | . . . . ‖ |
| அனுபல்லவி | | |
| தா , நி தா பா பா தா பா மா | ப த ப ம பா தா | ப த ப ம க ரி ஸா |
| மோ . ல்ல ல சே பூ . ஜிஞ் சி | ம்ரோ. . . க்கே மு | ப்ரோ.வு . மம் . மா (அல்ல) |
| சரணங்கள் | | |
| 1. ஸரிகாமப மபகமகரிஸ நிஸரிகம | க ரி ஸா ; நி நி | நீ ஸா ரி ஸ ரீ |
| மா . ரு . . . .பா . ரி . கி . தா .ள . | லே. க . ஈ . | ரா . ஜ . கு |
| ரிகமப மபகரி ஸநிஸரி காரிஸ | ஸா நி ஸ தா ; | ஸா ; ; ; |
| மா. . . ரு .னி . தே . ச்சி . தா . மிங் | தா . . க . | . . . . |
| தா , நி தா பா பா தா பா மா | ப த ப ம பா தா | பதபம கரிஸா ‖ |
| தா . ரு மா ரா யே ப்ர து கு | த . த்த . ளிஞ் சே | தேங். . . தா . க ‖ (அல்ல) |
| (மிச்ச சரணங்களேயும் | இ தே ம ா திரி | பாடவும்) |
| 2. கா லி . . வா ன லு நி ண் டா | ரா யே . மா | ப னு லே ல் ல |
| கே லி ஸே . . யு ட கே ட | மா . யே . | . . . . |
| மா லி மி தோ ம ம் மே லு | ம க னீ யே ட | பா ய ஞ யே ‖ (அல்ல) |
| 3. ஸோ ம் மு லே ல் ல நீ கோ ஸ கே | ம ம் மா . ய மு | ஞ தே வி ஈ |
| ஸ ு மு கு னி க ட் டே ஜே ர் பு | ம ம் மா . . | . . . . |
| யே ம் மே கா னி ப லி மி னி | யே ல தே ச் சி | தி ம ம் ம ‖ (அல்ல) |

| \| 4 | O | O |
|---|---|---|
| 4. ந ளி ன ப வு டு வ்ரா ஸி ன | வ் ரா . . லு யெ ட் | லை ன கா னி |
| நா து டு ப் ர தி கி யு ண் டே | சா . . லு . . | . . , . |
| ப் ர ள ய மு ல ய் யீ னி யே | ப னி ஜே ஸி | ன பா ம லு \|\| (அல்ல) |
| 5. தே ஹ மு லெ ல் ல ஞே ஸ கே | ம ம் மா . ஓ | தே வி கி ரு ஷ் ண |
| தே வு னி க ட் டு ஜே ர் பு | ம ம் மா . . . | . . . . |
| மோ ஹ னு ங் கு லி . மே மு | மோ ஸ பு ச் சி | தி . ம ம் ம \|\| (அல்ல) |
| 6. மே மோ க் க டே ஞ் ச போ தி | ம ம் ம . மா | பா லி தே வு |
| டே மே மோ எ ஞ் சு கோ ன் னு | ட ம் மா . . | . . . . |
| ரா ம ரோ ஸ்ரீ தி யா க | ரா ஜா ப் து னி | பா ய ம ம் ம \|\| (அல்ல) |

தாத்பரியம்:—

அல்லகல்லோலமாயிற்றம்மா! யமுனாதேவி! எங்கள் கஷ்டங்களைத் தீர்ப்பாயம்மா!

முல்லை புஷ்பங்களால் உன்னைப் பூஜித்து நமஸ்கரிக்கின்றோம். தயைபுரிந்து காப்பாற்றம்மா!

மன்மத வேதனையைச் சகிக்க முடியாமல் இந்த ராஜகுமாரனை யழைத்து வந்தோமம்மா! எங்கள் பிழைப்புத் தாறுமாறாய்விட்டதே! தத்தளிப்பது இன்னும் எவ்வளவு காலமோ?

காற்றுமழை அதிகமாயிற்றே! எங்களுடைய வேலைகளெல்லாம் பிறர் கேலிசெய்வதற்கு இடமாயிற்றே! அன்புடன் எங்களை ரக்ஷிக்கும் புருஷர்களை விடும்படி நேரிட்டதே!

(எங்கள்) நகைகளை யெல்லாம் உனக்குக் கொடுத்தோமம்மா! யமுனாதேவி! இந்த ஸுமுகனை (கிருஷ்ணனை) எப்படியாவது கரை சேர்த்துவிடம்மா! ஐயோ! எதற்காக இந்த ஸுந்தர பாலனை அழைத்து வந்தோமம்மா!

பிரம்மதேவன் எழுதின எழுத்து எப்படியிருந்தாலும் நாதன் (கண்ணன்) பிழைத்திருந்தால் போதுமம்மா! ஸ்திரீகளாகிய நாங்கள் என்ன வேலை செய்தாலும் பிரளயமாகிறதேயம்மா!

எங்கள் தேகங்களை உனக்கு அர்ப்பணம் செய்தோமம்மா! ஓ யமுனாதேவி! கிருஷ்ண தேவனை யெப்படியாவது கரை சேர்த்துவிடம்மா! மோஹனாங்கனை (கிருஷ்ணனை) நாங்கள் மோசம் செய்து அழைத்து வந்தோமம்மா!

நாங்கள் ஒன்று நினைத்து வந்தோமம்மா! ஆனால் கிருஷ்ணன் என்னென்னவோ நினைத்துக் கொண்டானம்மா! தியாகராஜாப்தனை நாங்கள் விடோமம்மா!

வசனம் :—

இப்படிப்பட்ட சமயத்தில் விஷ்ணுவைத் தியானம் செய்து கொண்டிருக்கும் பிரம்மேந்திராதி தேவர்களெல்லாம் என்ன சொல்லுகிறார்களென்றால் :—

கந்த பத்யம் :—

19. பாரமுகானனி யீ பவ - வாரிதினி தரிம்பஜேயு வரதுனி கோரகை
மூரேடு யமுனாநதிலோ - ஸாரேகு வர்தில்ல வேடு சந்தமு கனரே.

தாத்பரியம் :—

"வானோர்காள்! கரையொன்றுமில்லாத இந்த அபாரமான ஸம்ஸார ஸாகரத்தைச் சுலபமாக தாண்டுவிக்கச் செய்யும் வரதனை ரக்ஷிக்கும் பொருட்டு, கோபியர்கள் யமுனாநதியை வேண்டிக்கொள்ளும் அழகைப் பாருங்கள்! இது நிரம்ப விந்தையாக இருக்கின்றதல்லவா?" என்று தமக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

வசனம் :—

யமுனாதேவியைப் பிரார்த்தித்ததினால் பயன் ஒன்றுமில்லாமற் போனதைக்கண்டு, துக்க சாகரத்தில் மூழ்கினவர்களாய், கோபியர்கள் பின்வருமாறு கூறினர் :—

ஸீஸ பத்யம் :—

3. பாலபாவமுதோட - பணதுல பாலிண்ட்ல | பை பவ்வளிஞ்சேடி பத்மநாபு
நிண்டிண்ட ஜோரபடி-யில்லாண்ட்லபட்டுசு | வேட்ககா திரிகேடி-விமலஹ்ருதயு
முத்துகாரக நூரி - முதிதலனேவுசு | நீடனு சோபில்லு - நிர்மலாத்மு
ஸ்திரீபுத்தி வல்லனு - ஜேருசுகோண்டிமிகாக | யேல தேச்சிதிமம்ம யேவு விபுனி
தல்லடில்லேடி காளிந்திதாடி தல்லி | சேந்தகிருஷ்ணுனி யேவேளஜேர்துமம்ம
யனுசுதாருண்யவதுலெல்ல னலருசுண்ட | ஜூசி மதிலோன னகுசுண்டே
[ஸாமுகுடபுடு.

தாத்பரியம் :—

"பால தன்மையுடன் கோபியர்களின் மார்பில் சயனிக்கும் பத்மநாபனை, வீடு வீடாகப்போய் நுழைந்து ஸ்திரீகளின் கைகளைப் பிடித்து வேடிக்கையாகத் திரியும் விமல ஹ்ருதயனை, அழகு சொட்டும் ஸ்திரீகளைப் பரிபாலனம் செய்துகொண்டு, அவர்களுடைய நிழலில் விளங்கும் நிர்மலாத்மனை, நம்மைக் காப்பாற்றும் பரமாத்மாவை, எதற்காக நாம் ஊரிலிருந்து யமுனாநதிக்கு அழைத்து வந்தோம்! ஸ்திரீ புத்தியினால் கெடுதல் விளைவித்துக் கொண்டோமல்லவா? ஆற்றைக் கடந்து மீண்டும் கிருஷ்ணனைத் தாயிடம் எந்த வேளை சேர்க்கப்போகிறோமம்மா" யென்று யௌவனவதிகளெல்லாம் அலறிக் கொண்டிருப்பதைப் பார்த்து, கண்ணன் தன் மனதிற்குள் அச்சமயம் நகைத்துக் கொண்டிருந்தார்.

**வசனம்** :— அச்சமயம் கிருஷ்ண பரமாத்மாவானவர் கோபியர்களைப் பின்னும் பழிக்கும் பொருட்டு, மிகவும் வருந்துகிறாற்போல் பாவனைசெய்து இவ்வாறு கூறினார் :—

த்விபதை :—

2. பாமலம்மெடு ரேகு - பண்ட்லகை நேனு | காமிஞ்சி முத்யமுல் - கரமுல நிண்ட
னுனுசுக நே ராக - னுப்போங்கி மீரு | * கனுலனு த்ரிப்புசு - கடினி நன்னுனிசி
மஞ்ஜுளமுகுலார - மதவதுல்ார | † வேஞ்சேஸிதிரிகானி - வேட்கமீரகனு
அபுடு நே ரானனி - யாடேகோலேக | யிபுடு சோகிஞ்சேதி - ஹீனமுகாதே
யிந்தகு வச்சேதி - யெருகலேனைதி | யிந்துல நம்மரா - தெந்தவாரிகினி.

**தாத்பரியம்** :— வீதியில் பெண்கள் விற்கும் இலந்தம் பழத்தை ஆசையுடன் வாங்குவதற்காக நான் கை நிறைய முத்துக்களைக்கொண்டு வந்த சமயத்தில், நீங்கள் என்னைப் பார்த்து சந்தோஷமடைந்து கண்களைத் திருப்பிக்கொண்டு, இடுப்பின்மீது என்னைவைத்து வேடிக்கையாக அழைத்துக்கொண்டு வந்து விட்டீர்களே! அழகு வாய்ந்த முகத்தையுடையவர்களே! மதங்கொண்ட மங்கையர்களே! அப்பொழுதே நான் வரமாட்டேன் என்றேனே! அதைக்கேளாமல் போனீர்கள். இப்பொழுது விசனப்படுவது இழிவல்லவா? இவ்வாறு கஷ்டம் வருமென்று தெரிந்துகொள்ளாமற் போனேன். ஸ்திரீகள் எப்பேற்பட்டவர்களா யிருந்தாலும் நம்புவதற்கில்லை.

வசனம் :— வைத்தியன் விசனப்படும் ரீதியாக கிருஷ்ணன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட கோபிகைகள் மிக்க துக்கமடைந்து என்ன சொல்லுகிறார்களென்றால் :—

உத்பலமாலை :—

1. மானுனபெட்டு தேனியனு - மானகதேச்சி மதிஞ்சி மானினீ
தானு புஜிம்பலேக வஸு - தாஸ்தலி ஞெல்கக போஸுகொன்ன சந்
தான புரம் புனன் வெலயு - தானவவைரினி கூட லேகனே
மானமு போவனுயெ மன - மந்தரி பாபமு போஸுகொண்டிமே.

**தாத்பரியம்** :— பேராசைகொண்ட ஒரு ஸ்திரீ ஈக்கள் மரத்தில் வைத்த தேனை கொஞ்சமும் விடாமல் எடுத்து வந்து, அதைத்தானும் சாப்பிடாமல் பூமியின்மேல் சிந்த விட்டதைப்போல், ஊரில் பிரகாசித்துக்கொண்டிருக்கும் ராக்ஷஸவைரியை (கண்ணனை) இங்கே அழைத்துக்கொண்டுவந்து கூடமுடியாமல், மானமும் போய், எல்லாருடைய பாபத்தையும் ஏற்றுக்கொண்டோமே!

**வசனம்** :— இவ்வாறு பிரலாபித்துக்கொண்டே கோபஸுந்தரிகள் தங்களுடைய பூர்வ ஜன்ம ஊழ்வினையின் பலன்களை நினைத்து என்ன சொல்லுகிறார்கள் :—

---

* கனுல த்ரிப்புசு னெத்தி - கொனி வேட்கதோட.
† கொஞ்ஜகனனுதேக - கொப்புன னிடுகு.

# 14. "பெருகு பாலு"

8. கண்டாராகம்—ஆதிதாளம்

{ ஸக *ரிகமபநிஸ்
{ ஸ்நிதபமகரிஸ

| \|4 | O | O |
|---|---|---|
| பல்லவி | | |
| ; க க மா - க ம பா பா - பா பா | பா ; த நீ , த ப | பா ப த த ப மா |
| . பெ ரு கு பா . . லு பு ஜி | யிஞ் . சி . . . . | த னு . வு . னு |
| ; மா , க ரீ மா ப ம பா த ப | ம ப த ப மா பா | ப ம ம க க ரி ஸா |
| . பேஞ் . சி ன தேல் . . . ல . | திங் . . . . து | கா . . . . . . |
| ; ஸ ஸா ரி ஸா ஸா ரி ஸ நீ ; | நீ ஸா கா ; | கா மா பா ; |
| . நி ர வ தி ஸு க . தா . | ய க மா . | வ ய ஸு . |
| ; ப நீ த பா ப ம ம க க ரி ரி ஸ | ஸா ம க க ரி ரீ | ஸா ; ; ; \|\| |
| . . நீ ட னு க . லி . பே . . . | டங் . . . . து | கா . . . \|\| |
| சரணங்கள் | | |
| (பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. அ த் த மா ம ல தோ | நீ கை | மே மே து |
| ரா டி ன தே ல் ல | யிங் . . . து | கா . . . |
| ஸ த் த க லி கி யி க | ஊ ஞ | யு ங் து ம னி |
| ஸ ங் த ஸி ல் லி ன | திங் . . . து | கா . . . \|\| |
| 2. ஆ . ஸ தீ . ர நீ . | ஸே வ வ | ல யு ன னி |
| ய ல ஸி ன தே ல் ல | னிங் . . . து | கா . . . |
| பா ஸி யு ண் ட னே | ர க பே . | த் த ல சே |
| பா மு ல ஜே ங் தி ன | திங் . . . து | கா . . . \|\| |
| 3. ஸ் நா ன பா ன மு லு | ஸே யு . | வே ள நி னு |
| தி யா ன மு ஜே ஸி ன | திங் . . . து | கா . . . |
| மே னு ல நீ ஸோ ம் | மு லு ஸே | யு ட கை |
| மே ம ல் லா டி ன | திங் . . . து | கா . . . \|\| |

| \| 4 | O | O |
|---|---|---|
| 4. த லி ரு போ ணு லே | ய மு ஞ | ந தி லோ |
| த ல் ல டி ல் லே தி | இ ங் . . . து | கா . . . |
| வ ல சு சு தோ லி ஜ ன் | ம மு ரா | மு னி சே |
| வ ர மு லு ப ட ஸி ன | தி ங் . . . து | கா . . . \|\| |
| 5. கோ டி ஜ ன். ம மு லு | த ப மு | லு சே ஸி |
| கோ ரி ன தெ ல் ல | னி ங் . . . து | கா . . . |
| ஸா டி லே . னி நீ | லீ ல லு | ம ன ஸா ன |
| ஸை ரி ஞ் சி யு ன் ன | தி ங் . . . து | கா . . . \|\| |
| 6. ஆ க ம நி க ம பு | ரா ஞ | சா ரு ட னி |
| அ னு ஸ ரி . ஞ் சி ன | தி ங் . . . து | கா . . . |
| தி யா க ரா ஜ னு த | தா ர க | நா ம நீ |
| த த் வ மு தெ லி ஸி ன | தி ங் . . . து | கா . . . \|\| |

தாத்பரியம் :— *நிரவதிஸுகதாயக !* (எல்லையற்ற சுகத்தைக் கொடுப்பவரே !) *தயிர் பாலெல்லாம் நன்ருகப் புசித்துத் தேகத்தைப் பெருக்கினதெல்லாம் இதற்குத்தானு? எங்களுடைய யௌவனமெல்லாம் விருதாவாகி இந்த யமுனுநதியில் முழுகி உயிரை விடுவதற்குத்தானு ?*

*மாமி மாமன்மாருடன் உனக்காக நாங்கள் எதிராடினதெல்லாம் இதற்குத்தானு? சக்தி உண்டாகி இனிமேலாவது ஸந்தோஷமாக இருக்கலாமென நினைத்ததெல்லாம் இதற்குத்தானு ?*

*ஆசைதீர உன் ஸேவை செய்யவேண்டுமென்று கஷ்டப்பட்டு சோர்வடைந்ததெல்லாம் இதற்குத்தானு? உன்னை விட்டுவிட முடியாமல், உன் சமுகத்திற்கு வந்த பெரியவர்களால் கஷ்டப்பட்டதெல்லாம் இந்த நதியில் உயிரை மாய்த்துக்கொள்வதற்குத்தானு?*

*ஸ்நானபானங்கள் செய்த காலத்தில்கூட உன்னையே தியானம் செய்ததெல்லாம் இதற்குத்தானு ? எங்கள் சரீரங்களை உனக்குச் சமர்ப்பணம் செய்யவேண்டுமென்று நாங்கள் அல்லாடினதெல்லாம் இதற்குத்தானு ?*

*ஸகிகளான நாம் இந்த யமுனுநதிக்கு வந்தது இப்படித் தவிப்பதற்குத்தானு? பூர்வ ஜன்மத்தில் அதிக பக்தி செய்து ஸ்ரீராமசந்திரமூர்த்தியிடம் வரம் பெற்றதெல்லாம் இந்நதியில் உயிரை மாய்த்துக் கொள்வதற்குத்தானு ?*

*கோடி ஜன்மங்கள் தபவிருந்து, பிரார்த்தனை செய்ததெல்லாம் இதற்குத்தானு? நிகரற்ற உன்னுடைய லீலைகளினுல் ஏற்பட்ட சிரமங்களையெல்லாம் மனதில் நாங்கள் சகித்துக்கொண்டிருந்ததெல்லாம் இதற்குத்தானு ?*

வேத வேதாந்த புராணுசாரியனென்று உன்னை யனுசரித்ததெல்லாம் இதற்குத் தானு? பரமசிவனுல் புகழப்பட்ட ஓ தாரகநாமா? உன்னுடைய தத்வத்தை யறிந்து கொண்டது இதற்குத்தானு?

வசனம் :—

இவ்வாறு துன்பத்தினுல் வருந்திகொண்டிருக்கும் ஸுந்தரிகளைப் பார்த்த கிருஷ்ண பரமாத்மா, பிழைக்க உபாயம் கூறினது எவ்வாறெனில் :—

உத்ஸாஹ :—

அங்கலார்சராது ஓ பு - ஜங்கவேணுலார யா
யங்கஜாரிகைன கர்ம - மந்தரானலம்பு ஸா
ரங்கநேத்ருலார பஞ்ச - ரங்குகஞ்சு கம்புலன்
போங்கிவச்சு நீடிகண்ட - போந்து கானு னுஞ்சரே.

தாத்பரியம் :—

கருநாகத்தைப் போன்ற ஜடையையுடைய வனிதைகளே! (இச்சமயத்தில்) அதைரியப்படலாகாது. அந்த பரமசிவனுக்கும் கர்மம் விடாது. ஆகையினுல் மான் விழிகளைப் போன்ற கண்களையுடையவர்களே! பஞ்சவர்ண ரவிக்கைகளை ஜலம் பொங்கிவரும் கண்ணில் (படகு த்வாரத்தில்) திணியுங்கள். (ஜலம் இனி உள்ளே வரவொட்டாவண்ணம் செய்வதற்கு இதுவே உபாயம்.)

வசனம் :—

ஆபத்கால உபாயமான வார்த்தைகளைக் கேட்டு கோபியர்கள் என்ன செய்கிறார்களென்றால் :—

கந்த பத்யம் :—

20. ஆ மனவினி வினி ஸுததுலு - க்ஷேமமு கோரகை முதான சீக்ரமுகானே
யேமரக கஞ்சுகம்முலு - நேமமுதோ னுனுப தான நில்வகபோயேன்.

தாத்பரியம்: —

அந்த வார்த்தைகளைக் கேட்டு ஸுந்தரிகள் க்ஷேமத்தின் பொருட்டு, ஸந்தோஷத்துடன் சிக்கிரமாக, பின் வாங்காமல், கிரமமாக ரவிக்கைகளை (அந்த த்வாரத்தில்) திணிக்க, அவைகள் அங்கு நில்லாமல், தண்ணீரின் வேகத்தினுல் தக்ஷணமே அடித்துக் கொண்டு போயின.

வசனம் :—

நவரத்னங்களுடன் கூடின தங்கமயமான ரவிக்கைகள், ஓடத்வாரத்தில் நில்லாமல் ஆற்றிற் போனதைப் பார்த்து கோபிகாமணிகள் இவ்வாறு பிரலாபித்தார்கள் :—

தரு]

# 15. "கிருஷ்ணா மாகேமி"

8. புன்னாகவராளிராகம்—சாபுதாளம்

{நிஸரிகமபதநி
{நிதபமகரிஸநி

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| 1. ஸ ரீ மா ம க | க ரீ ரீ ரி ஸ | ஸா , நீ ; | , , , ஸா ஸ நி |
| கிருஷ் ணா . . | மா . கே மி . | தோ . வ . | . . . பல் கு . |
| 2. ஸ ரீ மா ம க | க ரீ ரீ ரி ஸ | ஸா , நீ ; | , , , ஸா ஸா |
| கிருஷ் ணா . . | மா . கே மி . | தோ . வ . | . . . பல் கு |
| கா , மா பா | ப பா ப த பா | மாபதபா பமகா | க ரீ ஸா ஸ நி |
| கீர் . த்தி கல் | கு னு தே . வ | தே . . . வ . . | . . பா ல . |
| ஸ ரீ மா ம க | க ரீ ரீ நி ஸ | ஸா , நீ ; | ஸா , ; ; \|\| |
| கிருஷ் ணா . . | மா . கே மி . | தோ . வ . | . . . . \|\| |
| | சரணங்கள் | | |
| | (பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. ஸ ரி கே ர | வி கே லே ல் ல | போ யே | . . வே ர் ரி |
| ச லி கி மே | னு லோ ர் வ | வா யே | . . . ஸ்ரீ \|\| |
| 2. ஸ ரி வா ரி | லோ ஸி க் கு | போ யே | . . நீ ரு |
| ஜா னு ல | லை தா க | ணு யே | . . பா ல \|\| |
| 3. ஸ ர் வ மு | நே ன னு | கோ ன் ன | . . நீ து |
| ஸா ம ர் | த் ய மு ஜூ பு | சி ன் ன | . . பா ல \|\| |
| 4. பா ய லே | னி ம ம் மு | நீ வு | . . யே யு |
| பா ய மை | . ன *தே ல் பி | ப்ரோ வு | . . பா ல \|\| |
| 5. மா தோ ஜே | ர க யி ந் த | பா த | . . க ல் கே |
| ம ர து ம | யி க ப் ரா ண | நா த | . . பா ல \|\| |
| 6. இ ந் து க | னு சு த ல் லி | ஸா கே | ணே . லே க |
| யே பா . | பு ல க ண் ட் லு | தா கே | ணே . பா ல \|\| |
| 7. ரா கே ந் து | மு க த ய | ரா தா | . . தி யா க |
| ரா ஜா ர் | சி த ப்ரோ வ | ரா தா | . . பா ல \|\| |

குறிப்பு :— இந்த பாட்டில் பல்லவியை யெல்லா கோபியர்களும் சரணங்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கோபிகையுமாகப் பாடுகிறார்கள்.

* ஜேஸி ப்ரோவு.

தாத்பரியம் :— தேவாதிதேவனை பாலகிருஷ்ணு! எங்களுக்கென்ன வழி? சொல்வாய்! (வழிசொல்லுவதினுல்) உனக்குக் கீர்த்தி உண்டாகும்.

(எங்கள்) ஸரிகை ரவிக்கைகளெல்லாம் போயினவே! சீரற்காற்றுக்குத் தேகம் சகிக்க முடியவில்லையே!

சரி சமானமானவர்களின் மத்தியில் எங்கள்மானம் போயிற்றே! ஜலம் தொடைக்குமேல் வந்துவிட்டதே!

"எல்லாம் நான்தான்" என்று சொல்லிக்கொண்டிருந்தாயே! நீ உனது சாமர்த்தியத்தை விரைவாகக் காண்பிப்பாய்!

உன்னைப் பிரிய முடியாத எங்களை எந்த உபாயமாவது செய்து காப்பாற்று!

எங்களுடன் சேர்ந்ததால் உனக்கு இவ்வளவு கஷ்டம் நேரிட்டது. இனி நாங்கள் இதை மறக்கவே மாட்டோம்.

இதற்காகத்தான் (உன்) தாயார் உன்னை வளர்த்தாளோ? அல்லது எந்த பாபிஷ்டியின் கண் பட்டதோ!

பூர்ண சந்திரனைப்போன்ற முகத்தையுடையவனே! தியாகராஜனுல் அர்ச்சிக்கப் பட்டவனே! (எங்கள் மீது உனக்கு) தயை வராதா? காப்பாற்ற மாட்டாயா?

வசனம் :— இவ்வாறு அதிக விசனத்துடன் கண்ணீர் தாரை தாரையாக விட்டுக் கொண்டு கலவரமுற்றுநிற்கும் வனிதைகளைப் பார்த்து கிருஷ்ணபரமாத்மா என்ன சொல்லுகிருரென்ருல் :—

கந்த பத்யம் :—

21. சோகிம்ப வேளகாதிதி - ராகாசசிவதனலார ரஜிதமயம்பேள
நேளகாரந்த்ரமுலோபல - கோகலு வதலிஞ்சி மீரு கொப்புனனிடரே.

தாத்பரியம் :— பூர்ணசந்திரனைப்போன்ற முகத்தை யுடையவர்களே! விசனப் படுவதற்கு வேளை இதுவல்ல. வெள்ளிமயமான ஓடத்தின் துவாரத்தில் உங்கள் தாவணிகளை யெடுத்து உடனே அடையுங்கள்.

வசனம் :— என்று கிருஷ்ணன் சொன்னதைக்கேட்ட கோபியர்கள் லஜ்ஜை யடைந்தவர்களாய் என்ன சொல்லுகிருர்கள் :—

கந்த பத்யம் :—

22. ராஜமுகுண்டாடக வினி - ராஜீவதளாக்ஷு லந்தரங்கமுலோ ஸங்
கோஜமுதோ வ்யத ஜெந்துசு - ஸ்திரீஜன்மம் பேல சுலிகெ சீ சீ யனுசுன்.

தாத்பரியம் :— சந்திரனைப்போன்ற முகத்தையுடைய கிருஷ்ணன் இவ்வாறு சொன்னதைக்கேட்டு தாமரை இதழைப்போன்ற கண்களையுடைய யுவதிகள், அந்தரங்கத்தில் வெட்கத்தினுல் விசன மடைந்து, இந்த ஸ்திரீ ஜன்மம் எதற்கு எடுத்தோம்! சீ! சீ! யென்று ஒருவர்க்கொருவர் வெறுத்துக் கொண்டார்கள்.

# 16. "இந்துகேமிஸேது"

39. வராளிராகம்—சாபுதாளம் { ஸரிகமபதநிஸ் / ஸ்நிதபமகரிஸ

தரு] [ஸம்பாஷணை: கோபிகைகளுக்கும் கிருஷ்ணனுக்கும் தர்க்கம்]

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | பல்லவி | | |
| மா , மா மா | , மா பா பா | ம மா பா ; | , ; ; ; |
| இந் . து கே | . மி ஸே து | மம் . மா . | . . . . . |
| மா , மா மா | , மா பா பா | ம மா பா ; | ; ம கா க ரி |
| இந் . து கே | . மி ஸே து | மம் . மா . | . . கிரு ஷ் ண |
| ஸா , கா கா | ம மா கா கா | கா ம ப ம கா | கரீரி ஸ ஸா ‖ |
| டெந் . த மா | . ட லா டே | ணம் . மா . . | . . . . . . ‖ |
| | சரணங்கள் | | |
| | (பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. ம கு வ ல ண் | டே . யி ந் த | வா தா | . . மா கு |
| மா ன மே | ப் ரா ண மு | கா தா | . . . . . ‖ |
| 2. கு ஸ கு ஸ | ல ங் தே மி | வ ச் சு | . . சே லு ல |
| உ ஸ ரு ண் டே | ஊ ரு போ | வ ச் சு | . . . . . ‖ |
| 3. வ னி த ல | கே வ ரி | கை ன | . . கி ரு ஷ் ண |
| வ ஞ் ச ன | கா ப லு க | த கு ண | . . . . . ‖ |
| 4. ஹ ட மு ஸே | . ய வே ள | கா து | . . ஆ த் ம |
| ஹ த் ய கா | னி வே ரே | லே து | . . . . . ‖ |
| 5. ந க் ன மு | கா நி லு வ | வ ச மா | . . கி ரு ஷ் ண |
| ந லு கு ரி | லோ *நீ கு | ய ச மா | . . . . . ‖ |
| 6. நா மா | ட லு வி னி | மீ ரு | சே லு லா ர |
| ந னு க ட் டு | ஜே ர் ச போ | னீ ரு | . . . . . ‖ |
| 7. ல ல ன ல | பா ப மு | லே மோ | . . ஈ . |
| லா கு வ்ரா | த லு ண் டே | னே மோ | . . . . . ‖ |

குறிப்பு :— இந்த பாட்டில் பல்லவியையும் கடைசி சரணத்தையும் யெல்லா கோபிகைகளும் பாடுகிறார்கள். மிச்ச சரணங்களை ஒவ்வொரு கோபிகையும் கிருஷ்ணனும் மாறிமாறிப் பாடுகிறார்கள்.

* மாகு யசமா.

| | | | |
|---|---|---|---|
| 8. வே ல கு தீ | ஸி ன வ ல பு | ரா து | . . கா க |
| வே ல து ல | ணி க ந ம் ம | ரா து | . . . . ‖ |
| 9. ரா ஜ ன் ய | யி டு லே ஞ் ச | வ ல து | . . தி யா க |
| ரா ஜ வி | ணு த ப் ரே ம | க ல து | . . . . ‖ |

தாத்பரியம் :— கோபியர்கள் :— இதற்கு என்ன செய்வோமம்மா ? கிருஷ்ணன் என்ன வார்த்தைகள் சொன்னானம்மா ?

ஒரு கோபி :— ஸ்திரீகளென்றால் இவ்வளவு இழிவாகப் போய் விட்டதா ? நமக்கு மானமே பிராணமல்லவா ?

கிருஷ் :— ஸகிகாள் ! (இந்த ஆபத்து காலத்தில்) நீங்கள் குசுகுசுவென்று பேசுவதினால் பயனென்ன ? உயிரிருந்தால் ஊர்போய்ச் சேரலாம்.

(இன்னொரு) கோபி :— கிருஷ்ணா ! வஞ்சனையாக ஸ்திரீகளிடத்திற் பேசுவது தகுதியா ?

கிருஷ் :— பிடிவாதம் பிடிக்க இது சமயமில்லை. ஆத்மஹத்தியாக முடியுமே தவிர வேறில்லை.

(வேறொரு) கோபி :— கிருஷ்ணா ! நிர்வாணமாக (இந்தக் கடுமையான காற்று மழையில் எங்களால்) நிற்க சாத்தியமா ? நாலுபேருக்கு நடுவில் (இப்படிச் செய்யச் சொல்வதினால்) உனக்குத்தான் கீர்த்தியா ?

கிருஷ் :— ஸகிகளே ! என் வார்த்தையைக் கேட்டு நீங்கள் என்னைக் கரை சேர்ப்பிக்க மாட்டீர்கள் ?

(மற்றொரு) கோபி :— இந்த யுவதிகளின் பாபமோ வென்னமோ ! இம்மாதிரி அனுபவிக்கத் தலைவிதி யிருக்கிறது போலும் !

கிருஷ் :— விலைக்கு வாங்கின ப்ரேமை வராது. ஸ்திரீகளை இனி நம்பக்கூடாது.

கோபிகைகள் :— தியாகராஜனால் புகழப்பட்ட ஓ கிருஷ்ணா ! அம்மாதிரி எண்ண வேண்டாம். உன் பேரில் எங்களுக்கு நிஜமான அன்பு இருக்கிறது.

வசனம் :— அப்பொழுது கோபிகாமணிகள் ஒருவரோடொருவர் ஆலோசனை செய்து கிருஷ்ணனை நம்பலாமென்று துணிந்து பின்வருமாறு சொன்னார்கள் :—

கந்த பத்யம் :—

23. அகணிதலோகாதாருடு - நிகமாகம ஸஞ்சருண்டு நிர்மல ஹ்ருதயுண்
டகதரு டனயமு ப்ரோசுனு - வக ஜ ெபெடு வனிதலார வரதுண்டனகன்.

தாத்பரியம் :—வனிதைகளே ! கிருஷ்ணன் ஸாமான்யனல்லன். அனேகலோகங்களுக்கு ஆதாரமானவன். வேதவேதாந்தங்களில் ஸஞ்சரிப்பவன். நிர்மலமான ஹ்ருதயத்தைப் பெற்றவன். பெரிய (கோவர்த்தன) பர்வதத்தைக் கையிலெடுத்ததை நாம் பார்க்கவில்லையா ? இச்சமயத்தில் நம்மைக் காப்பாற்றாமல் விடான். அவன் பெயர் வரதனல்லவா ?

# 17. "வேதவாக்யமனி"

28. மோஹனராகம்—சாபுதாளம் { ஸரிகபதஸ் / ஸ்தபகரிஸ

| | | | |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| 1. ஸ ரீ கா க ரி | ஸ ஸா ஸா ஸ த | ஸ ரீ கா கா | , , , , , க ரி |
| வே . த வா . | . க்ய ம னி . | எஞ் . சி ரி | . . . . . . . |
| 2. ஸ ரீ கா க ரி | ஸ ஸா ஸா ஸ த | ஸ ரீ கா கா | , , , பா ப க |
| வே . த வா . | . க்ய ம னி . | எஞ் . சி ரி | . . . ஈ . . |
| ப தா ஸ்ா ஸ்த | த பா ப க க ரி | க ரீ க ப க ரி | ரீ , ரி ஸ ஸா ‖ |
| வே ல து லேல் | . ல ஸம் . ம . | தி ஞ் சி . ரி . | . . . . . ‖ |
| | சரணங்கள் | | |
| | (பல்லவியைப் | போலவே | பாடவும்) |
| 1. சீ ர ல ன் | னி யு வ த | லி ஞ் சி ரி | . . . யே ந் தோ |
| ஸி க் கு சே | . த ன ந் து | னு ஞ் சி . ரி | . . . . . ‖ |
| 2. அ ந் து ன | நி லு வ க | டோ . யே னு | . . மே னு |
| ல ந் த ரி | கி த ட வ | ணு . யே னு | . . . . . ‖ |
| 3. க னு கோ ந் து | ரோ . ய னி | ஸ ர கு ன | பா லி ண் ட் ல |
| க ர மு ல | மு ஸி தே | ம ரு கு ணு | . . . . . ‖ |
| 4. மா . ன மு | ல னு மு ஸு | கோ ந் து ரோ | . . த ம |
| ப்ரா . ண மு | ல னு *ப்ரோ சு | கோ ந் து ரோ | . . . . . ‖ |
| 5. சே லு ல நோ | . ரு எ ண் ட | ணு . யே னு | . . நீ ரு |
| சி லு சி லு | ம னி யே க் கு | வா . யே னு | . . . . . ‖ |
| 6. வ லு வ லு | கா . ன க | போ . யே னு | . . ஸ து ல |
| வ த ன மு | ல டே ஸ் ரு க் க | ணு . யே னு | . . . . . ‖ |

* காசுகொந்துரோ

| | | | |
|---|---|---|---|
| 7. க ர கி க | ர கி ய ங் க | லா ர் சி ரி | . . சே வு வு |
| க ம லா க்ஷு | ணு ர மு ன | ஜே ர் சி ரி | . . . . . \|\| |
| 8. க னு ல கா | டு க நீ ரு | கா . ர கா | . . ஜூ டு சி |
| கா ந் து டே ங் | தோ மு த் து | கா . ர க | . . . . . \|\| |
| 9. ர ம ணு ல | ம த மெ ல் ல | ஜ ரி கெ னு | . . தி யா க |
| ரா ஜ னு | து னி ம தி | க ரி கெ னு | . . . . . \|\| |

தாத்பரியம் :—

(கிருஷ்ண பரமாத்மா கூறிய வார்த்தைகளை) வேத வாக்கியமாக நினைத்தார்கள். (அவர் சொன்னபடி செய்ய) வனிதைகள் சம்மதித்தார்கள்.

மேலாக்குகளை யெடுத்து எவ்வளவோ நாணத்துடன் ஓடத்தின் த்வாரத்திலடைத்தார்கள்.

இவைகளும் நில்லாமல் ஜலத்தின் வேகத்தில் அடித்துக்கொண்டு போயின. எல்லாருடைய தேகங்களும் நனைந்துவிட்டது.

யாராவது பார்த்துவிடுவார்களோவென மார்பைக் கைகளால் மூடிக்கொண்டார்கள்.

மானத்தை மூடிக்கொள்ளுவார்களா அல்லது தங்கள் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளுவார்களா ?

பயத்தினுல் வனிதைகளின் வாய் உலர ஆரம்பித்தது. ஜலமோ சிலுசிலென்று ஓடத்தில் அதிகமாக வந்துவிட்டது.

மேலாக்குகள் காணுமற்போயின. ஸதிகளின் வதனங்கள் சுருங்கவாரம்பித்தன.

மனமுருகி உருகி பிரலாபித்தார்கள். (அச்சமயம் ஸ்ரீ கிருஷ்ணனை ஆபத்தில் விடக்கூடாது ; காப்பாற்ற வேண்டுமென்று) வனிதைகள் கண்ணனை அப்படியே தூக்கி மார்பின்மீது வைத்துக்கொண்டார்கள்.

அச்சமயம் கோபிகைகளின் கண்ணீர் (கண்) மையுடன் கலந்து வருவதைப் பார்த்த கிருஷ்ண பரமாத்மாவின் ஹ்ருதயம் இளகி, அவர்கள் மீது அன்பு கூர்ந்தார்.

இந்த வனிதைகளின் மதமெல்லாம் போயிற்று. தியாகராஜனுல் ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட கிருஷ்ணனின் மனம் கரைந்தது.

வசனம் :— அப்பொழுது கோபிகாமணிகள் மிக்க துயரமுற்றவர்களாய் என்ன சொல்லுகிறுர்களென்றுல் :—

உத்பலமாலே :—

2. லக்னம தெட்டிதோ வனித - லந்தந வச்சின வேள தேவதல்
மக்னுல ஜேஸிரோ கமல - மந்து ஜனிஞ்சினவானி வ்ராதயோ
விக்னமு வச்சுனுயனுசு - விண்டிமி வார்த்தலு விச்வஸிம்பு சுன்
நக்னலமைதி மேமி கதி - நாத துகூலமு லேந்து கானமே.

தாத்பரியம் :—

கோபிகைகளே! நாம் எந்த லக்னத்தில் புறப்பட்டோமோ! ஒரு வேளே தேவதைகள் நம்மை முழுகும்படி செய்தார்களோ! அல்லது பிரம்மதேவன் நமக்கெழுதின எழுத்தோ! விக்னம் ஒன்றும் வராதென்று, ஸ்ரீ கிருஷ்ணனின் வார்த்தைகளே விச்வாஸத்துடன் கேட்டு வந்தோமே! ஆடைகளே யிழந்தோம். நமக்கென்ன கதி? எங்கே பார்த்தாலும் நம்முடைய வஸ்திரங்களைக் காணுமே.

வசனம் :—

பூர்வ ஜன்மத்தில் செய்த நற்செய்கைகளின் பயனுக, கோபிகாமணிகள் இவ்வுலக போக பாக்கியங்களே யெல்லாம் அநித்தியமெனக் கருதி, ஸ்ரீ கிருஷ்ண பாதாரவிந்தத்தை யடைவதற்கு யோசிக்கும் மார்க்கம் எவ்வாறெனில் :—

சம்பகமாலே :—

3. ப்ரதுகனு தாரி கானமிக - பாரமு தாளது ஓடலோபலன்
குதிகெனுபட்டே நீரிபுடு - கோப்புன ஸ்ரீஹரி பாத பத்மமுல்
மதினிதலஞ்சு கோஞ்சு வர - மாதவ நாமமு நோட பல்கரே
பதிதுல ப்ரோசுவாடு மன - பாலிட கல்கி ஸுகம்புலிச்சுனே.

தாத்பரியம் :—

பிழைப்பதற்கோ வழி ஒன்றும் தெரியவில்லே. கழுத்துவரைக்கும் ஜலம் வந்துவிட்டது. ஓடம் அதிக பாரத்தினுல் இனி தாளாது (அதாவது மூழ்கிப்போவது நிச்சயம்). ஆகையினுல் சீக்கிரமாக ஸ்ரீ ஹரியின் பாதத்தை மனதில் வைத்து தியானித்து, மாதவன் நாமத்தைச் சொல்லுங்கள். பதிதர்களைக் காப்பாற்றுகிறவன் நம்பால் கருணை கூர்ந்து ஸுகத்தைக் கொடுப்பான்.

வசனம் :—

அப்படி அவர்கள் கண்ணனே ஸ்மரித்ததும் அச்சமயம், ஸர்வாதாரனுயும், நிர்விகாரனுயும், நிரஞ்சனனுயும், ஆதிமத்யாந்த ரஹிதனுயும், ஜகன்மோகனுகாரனுயும் தரிசனம் கொடுத்த ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து கோபியர்கள் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தார்கள் :—

தரு]

# 18. "ஹரிஹரி நீயொக்க"

8. புன்னாகவராளிராகம்—ஆதிதாளம்

நிஸரிகமபதநி
நிதபமகரிஸநி

| \| 4 | O | O |
|---|---|---|
| பல்லவி | | |
| ; க கா ம பா பா ; பா ; | பாதநி தநிதப | நிதாப தபமா |
| . ஹ ரி ஹ ரி நீ . . . | யோ . . க்க . . . | தி . . வ்ய . பா |
| ; மா க ரி கா மா ; ப த பா | நிதாப பமாக | காகரி ஸரிகா \|\| |
| . தா . . ர விந் . . . த | மி . . ய்ய . . | வே . . . . . \|\| |
| அனுபல்லவி | | |
| ; க கா ம பா தா தா தா ; | பா ; தா தா | ப த த நி தா பா |
| . த ர னு க லு . கு . | போ . க பா | க்ய . மேல் . ல னு |
| ; மா கா ரீ கா மா பா பா | பா , ம மா , க | கா , ரி ஸரி கா \|\| |
| . த த்ய மு கா . து ஸா | மீ . . ஸ்ரீ . . | கிருஷ்.. ண . . \|\| |
| சரணங்கள் | | |
| 1. ; க கா க கா கா ; கா கா | கா ; கா ; | கா கா கா கா |
| . ஸ ன க ஸ னந் . த ன | ஸ்ரீ . நா . | ர த சு கார் |
| ; ரி கா ரி ஸா ஸா ; ரி ஸ ஸா | ஸரிகரி ஸாரீ | ரி ஸ நீ நீ ; |
| . ஜா ன க னு லெல் . . . ல | னு . . . திம் . | சு . . . . . |
| ; க கா ம பா தா தா தா ; | பா ; ; ப த | பா , த நி தா ப |
| . வ ன ஜ ந ய ன ப்ரம் . | மா . . தி . | ஸங் . . க்ரந் . . |
| மா மா கா ரீ கா மா பா பா | பா , ம மா , க | கா , ரி ஸரி கா \|\| |
| த னு ல ன ய . மு . | ஸே . . . . . | வி . ஞ் சு . . \|\| (ஹரி ஹரி) |
| 2. நி னு வே த பு ரா | ண க ம | சா ஸ் த் ர |
| வி த் ய ல ய ந் து | ச ரி ஞ் | சு . . . |
| க ன ஸ ம நீ ல | நி ர ஞ் ஜ ன | ் ர் கு ண |
| க ணி க ர மு க தி யா | க ரா ஜா | பா . வி ஞ் சு \|\| (ஹரி ஹரி) |

தாத்பரியம் :— ஹரிஹரி ! உன்னுடைய திவ்ய பாதாரவிந்தத்தை அருள்வாய் !

இவ்வுலகில் கிடைக்கும் போக பாக்யங்களெல்லாம் அநித்தியமானவையல்லவா ?

ஸனகர், ஸனந்தனர், நாரதர், சுகர், அர்ஜுனர் முதலான மஹனீயர்கள் துதிக்கும் கமல நேத்திரங்களையுடைய (ஓ ஹரி !) பிரம்மாதி, தேவேந்திரர்கள் எப்பொழுதும் ஸேவிக்கும் (ஓ ஹரி !)

வேத புராணுகம சாஸ்திரங்களில் வசிப்பவனும், நீலமேகசியாமளமான தேகத்தை யுடையவனும், தோஷங்களற்றவனும், தியாகராஜனுல் அன்புடன் பாவிக்கப் படுபவனுமான ஓ ஹரி ! (உன்னுடைய திவ்ய பாதாரவிந்தத்தைக் கொடுத்தருள்வாய் !)

வசனம் :— இவ்வாறு ஒரே மனதாய் தியானத்திலிருந்த கோபிகாமணிகளைப் பார்த்து, பரமதயாளனுன ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா என்ன சொல்லுகிருரென்ருல் :—

சம்பகமாலே :—

4. பரமதயாகருண்டு நிஜ - பக்தஜனுவனு டப்ரமேயு டா
*ஸுரகண நீரதானிலுடு - †ஸோமுனி மித்ருடு சாந்த ரூபு டீ
தருணுலு போந்துனட்டி பரி - தாபமு ஜூசி கரங்கி வேகமே
கருணனு ஸேய தல்சுசுனு - காந்தல கிட்லனி ‡யேன் ப்ரியம்புனன்.

தாத்பரியம் :— பரமதயையுடன் கூடினவரும், உண்மையான பக்தர்களைக் காப்பாற்றுபவரும், அப்ரமேயனுனவரும், ராக்ஷஸக் கூட்டங்களான மேகங்களுக்கு வாயுவைப் போன்றவரும், பரமசிவனுக்கு மித்திரனுனவரும், சாந்த ஸ்வரூபியானவருமான கிருஷ்ண பரமாத்மா கோபிகைகளடைந்த வியாகூலத்தைப் பார்த்து, மனங்கரைந்து, தயையுடன் சீக்கிரம் கருணைபுரியும் பொருட்டுப் பின்வருமாறு பிரியமுடன் சொன்னுர்:—

கந்த பத்யம் :—

24. நன்னே தியானமு ஸேயுசு - கன்னீருல நிலிபி மீரு கரயுக முலசே
கன்னுலு மூஸி பஜிம்புடு - பன்னுக மீபாலி வேல்பு பல மிச்சுதயன்.

தாத்பரியம் :— கோபிகைகளே ! கண்ணீரை நிறுத்தி, நீங்கள் கைகளைக் கூப்பி, கண்களை மூடிக்கொண்டு, என்னையே தியானம் செய்து பஜியுங்கள் ! நிஜமாக உங்களைக் காப்பாற்றும் தெய்வம் தயை கூர்ந்து பலனளிக்கும்.

வசனம்:— அப்படிப்பட்ட சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ணதேவர் கூறிய மொழிகளைக் கேட்ட சுந்தரிகள் என்ன செய்கிருர்களென்ருல்:—

ஸீஸ பத்யம் :—

4. வ்யாதுலு கலவாரு - வைத்யுனி மாடலு | விச்வாஸமுலதோட - வினியடுலே
பூர்ண கர்பிணுலன - போலதுலெல்லனு மந்த்ர | ஸானி செப்பின மாட - ஸல்பினட்லு
பரிசாரகாதுலு - பாக்யவந்துனி மாட | தப்பக வின்னட்லு - தருணுலெல்ல
பரமேச்வருனி மாட - பக்திதோ வினி§கனுல் | மூஸி பஜிஞ்சிரி - வாஸிமெரஸி
அந்தகாரமு வர்ஷம்பு னணகிபோயே | வாடயேச்சோடனுண்டேஞே வச்செனசட
கனகமயவல்லலனு ரம்யகஞ்சுகமுல | ஜூசியுப்போங்கிராவேள ஸுததுலெல்ல.

---

* சரகண † சங்கர ‡ பல்கெ கிருஷ்ணுடுன் § கனுகூர்சி பஜிஞ்சிரி குட்டுமீர.

தாத்பரியம்:— அச்சமயம் கோபிகைகள், வியாதியஸ்தர்கள் வைத்தியன் சொல்லும் வார்த்தைகளை விச்வாசத்துடன் கேட்பதைப்போலும், பூர்ணகர்பிணிகளான ஸ்திரீகள் மருத்துவச்சி சொல்வதைச் செய்வதுபோலும், பரிசாரகர்கள் யஜமானர்களுடைய வார்த்தைகளைத் தப்பாமல் கேட்பதுபோலும், யுவதிகள் கிருஷ்ண பரமாத்மாவின் வார்த்தைகளைப் பக்தியுடன் கேட்டு, (தங்கள்) கண்களை மூடிக்கொண்டு நிஜமாக பகவானைத்யானம் செய்ய, உடனே இருள் அகன்று மழை நின்றுவிட்டது. ஓடம் ஆற்றங்கரையில் எங்கிருந்ததோ அவ்விடத்திற்கே வந்து சேர்ந்தது. தங்கமயமான வஸ்திரங்களும், பஞ்சவர்ணங்களுடன் பிரகாசிக்கும் ரவிக்கைகளும் மீண்டும் இவர்களுக்குக் கிடைக்க, இதையெல்லாம் கண்ணுற்று வனிதைகள் அத்யந்த சந்தோஷத்தை யடைந்தார்கள்.

வசனம் :— அப்பொழுது கோடி மன்மத ஸ்வரூபத்துடன் பிரகாசிப்பவனும், குவலயதளத்தை யொத்த கண்களையுடையவனுமான ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைப் பார்த்து, கோபிகாமணிகள் என்ன செய்கிறார்களென்றால் :—

சம்பகமாலை:—

5. கலுவலராஜா சந்தமுன - காந்திஜேலங்கேடி கிருஷ்ணு மோமுனன்
திலகபு சாகசக்யமுனு - திவ்ய ஸுவர்ணபு குண்டலம்புலன்
ஜேலகு கபோலயுக்மமுனு - ஜேடியலந்தரு சூசினந்தனே
தோலுதடி துக்கமுல் மறசி - தோடதே பாடிரி ஸந்தஸில்லுசுன்.

தாத்பரியம் :— நீலோத்பலங்களுக்கு அரசனான சந்திரனைப்போன்ற பிரகாசத்துடன் விளங்கின கிருஷ்ணபரமாத்மாவின் முகத்தில் வெகு சமத்காரமாக இடப்பட்டிருக்கும் பொட்டின் ஒளியையும், திவ்யமான தங்கக் குண்டலங்களுடன் ஜ்வலிக்கும் இரு கன்னங்களின் லாவண்யத்தையும் பார்த்த தக்ஷணமே, ஸகிகள் தாங்கள் அடைந்த துக்கங்களையெல்லாம் மறந்து, ஸந்தோஷப்பட்டு கிருஷ்ணன் மீது உடனே பாட ஆரம்பித்தார்கள்.

வசனம்:— மீண்டும் கோபிகாமணிகள் என்ன செய்கிறார்களென்றால் :—

உத்பலமாலை :—

3. மஞ்ஜுளபாஷு ரூபஜித - மன்மது *ஐந்த்ர குலப்ரதீபு ஸத்
குஞ்ஜரபோஷு சோபனனி - குஞ்சக்ருஹாந்த நிவாஸு மௌனி ஹ்ருத்
கஞ்ஜவிஹாருதீரு வர - காஞ்சன சேலுனி ஜூசினந்தனே
கஞ்ஜதளாக்ஷுலெல்ல ஹரி - கௌகிடஜேர்சிரி ஸந்தஸில்லுசுன்.

தாத்பரியம் :— மனதைக் கவரும்படி பேசுகிறவனும், ரூபத்தில் மன்மதனை ஜயித்தவனும், சந்திர வம்சத்திற்கு ஆபரணத்தைப்போன்றவனும், கஜேந்திரனைக் காப்பாற்றினவனும், மங்களமென்னும் கொடி வீட்டில் சயனித்துக் கொண்டிருப்பவனும், முனிபுங்கவர்களுடைய ஹ்ருதய கமலத்தில் வசிப்பவனும், தீரனும், சிரேஷ்டமான பொன்னிற பீதாம்பரத்தைத் தரித்துக்கொண்டவனுமான கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்த தக்ஷணமே, தாமரை இதழைப்போன்ற கண்களையுடைய யுவதிகள், மிக்க ஸந்தோஷத்துடன் ஹரியை கட்டிக்கொண்டார்கள்.

வசனம்:— கோபிகாமணிகள் கிருஷ்ண பரமாத்மாவை அலங்காரம் செய்வது எவ்வாறெனில் :—

---

* சந்த்ருனி வம்சபூஷு

தரு]

# 19. "கந்தமு புய்யருகா"

8. புன்னுகவராளி ராகம்—ஆதிதாளம்

நிஸரிகமபதநி
நிதபமகரிஸநி

| \| 4 | O | O |
|---|---|---|
| பல்லவி | | |
| ஸா ரீ கா ரீ ஸா ; ரீ ஸா | நீ ; ; ; | ஸா ; ஸா நீ |
| கந் . த மு புய் . ய ரு | கா . . . | பன் . னீ ரு |
| ஸா ரீ கா ரீ ஸா ; ரீ நீ | ஸா ; ; ; | ; ; ; ; \|\| |
| கந் . த மு புய் . ய ரு | கா . . . | . . . . . \|\| |
| அனுபல்லவி | | |
| கா கா மா-மா ; மா கா ரீ | கா கா மா-மா | ; மா கா ரீ |
| அந் . த மை . ன ய து | னந் . த னு | . . பை . |
| கா கா ரீ கா-மா பா தா த ப | மா பா தா த ப | மா கா ரீ ஸா\|\| |
| குந் . த ர த ன லி ரு . | வோந் . த க . | ப ரி ம ள \|\| (கந்த) |
| சரணங்கள் | | |
| 1. ஸா ரீ கா ரீ ஸா ; ரீ ஸா | நீ ; ; ; | ஸா ; ஸா நீ |
| தி ல க மு தித் . தே ரு | கா . . . | கஸ் . தூ ரி |
| ஸா ரீ கா ரீ ஸா ; ரீ நீ | ஸா ; ; ; | ; ; ; ; |
| தி ல க மு தித் . தே ரு | கா . . . | . . . . . |
| கா கா மா மா-மா மா கா ரீ | கா கா மா மா | மா ; கா ரீ |
| க ல க ல ம னு மு க | க ள க னி | ஸோ . க்கு சு |
| கா கா ரீ கா-மா பா தா பா | மா பா தா த ப | மா கா ரீ ஸா\|\| |
| ப வு கு ல னம் ரு த மு | லோ லி கே . . | ஸா . மி கி \|\| (கந்த) |
| (மிச்ச சரணங்களையும் | இதே மாதிரி | பாடவும்) |
| 2. சே ல மு க ட் டே ரு | கா . . . | ப ங் க ரு |
| சே ல மு க ட் டே ரு | கா . . . | . . . . . |
| மா லி மி தோ கோ | பா ல பா | லு ர தோ |
| ஞு ல மே பி ன வி | சா ல ந | ய னு னி கி\|\| (கந்த) |

| │ 4 | O | O |
|---|---|---|
| 3. ஹா ர து லே த் தே ரு | கா . . . | மு த் யா ல |
| ஹா ர து லே த் தே ரு | கா . . . | . . . . |
| நா ரீ ம ணு ல கு | வா ர மு | யௌ வ ன |
| வா ர க மோ ஸ கே | வா ரி ஜா | . க்ஷ⊓ ணி கி ‖ (கந்த) |
| 4. பூ ஜ லு ஸே ய ரு | கா . . . | ம ன ஸா ர |
| பூ ஜ லு ஸே ய ரு | கா . . . | . . . . |
| ஜா ஜ⊓ லு ம ரி வி ரி | வா ஜ⊓ லு | த வ ன மு |
| ரா ஜி த தி யா க | ரா ஜ னு | து னி பை ‖ (கந்த) |

தாத்பரியம் :— *மல்லி மொக்குகளைப் போன்ற பற்களையுடைய சுந்தரனை கிருஷ்ண பரமாத்மாவுக்கு, மிக்க வாசனையுடன் கூடிய பன்னீர் சந்தனத்தைப் பூசினார்கள்.*

*ஒளி வீசும் முகத்தின் களையைக் கண்டு பிரமித்து, அமிருதமான வார்த்தைகளைப் பொழியும் ஸ்வாமிக்குக் கஸ்தூரி திலகமிட்டார்கள்.*

*மிக்க அன்புடன் கோபால பாலர்களோடு பசுக்களை மேய்த்த விசாலக் கண்களையுடையவனுக்குப் பீதாம்பரத்தைக் கட்டினார்கள்.*

*ஸ்திரீ ரத்னங்களுக்கு யௌவனத்தை யெப்பொழுதும் கொடுக்கும் தாமரைக் கண்ணனுக்கு, முத்து ஹாரத்தி எடுத்தார்கள்.*

*தியாகராஜனால் புகழப்பட்டவன்மீது ஜாஜி புஷ்பம், இன்னும் இருவாக்ஷி, தவனம் முதலியவைகளால் மனதார பூஜை செய்தார்கள்.*

வசனம் :— *அச்சமயம் கோபிகாரத்னங்களின் மத்தியில் கிருஷ்ணபரமாத்மா பிரகாசித்த விதம் எவ்வாறெனில் :—*

ஸீஸ பத்யம் :—

5. ருக்ஷப்ருந்தமுலோனி - ரேராஜ⊓ சந்தான | பக்ஷிவாஹனு டந்து - பரகுசுண்டே
*ஸ⊓ரலப்ருந்தமுலோனி - ஸ⊓ரராஜ⊓ சந்தான | பரமாத்மு டாவேள - பரகுசுண்டே
†நவரத்ன ராஜிலோ - நாயகமணிரீதி | பாவனு டாவேள - பரகுசுண்டே
‡கலபப்ருந்தமுலோனி - கரிராஜ⊓ சந்தான | பாதுக க்ருஷ்ணுண்டு - பரகுசுண்டே
ப்ரம்மருத்ராதி வேல்புலு பத்மநாபு | சாகசக்யம்பு கனுகோனி ஸந்தஸில்லி [ஜனிரி.
கனகஸ⊓ம பூஜலோனரிஞ்சி காஞ்சிஹரினி | ஸ்வஸ்வ பவனம்முலகு னேக ஸதுலு

தாத்பரியம் :—*அச்சமயம் நக்ஷத்திரக் கூட்டங்களின் நடுவில் சந்திரனைப்போல் பக்ஷிவாஹனர் விளங்கினார். தேவர்களின் கூட்டத்தில் இந்திரனைப்போல் பரமாத்மா விளங்கினார். நவரத்னக் குவியலில் நாயக மணியைப்போல் எல்லோரையும் பரிசுத்த*

---

* தேவதா ஸமிதினி தேவேந்த்ரு சந்தான † நவரதனுளிலோ ‡ கரிணீனிசயமுன

மாக்கும் பரமாத்மா விளங்கினர். யானைக் கூட்டத்தின் நடுவில் கஜேந்திரனைப்போல் கிருஷ்ண பரமாத்மா பிரகாசித்தார். அப்பொழுது பிரம்ம ருத்ராதி தேவர்களெல்லாம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சமத்காரத்தைப் பார்த்து வியந்து, அதிக ஸந்தோஷத்துடன் ஸ்வர்ண புஷ்பங்களினல் ஹரியைப் பூஜை செய்து, தங்கள் தங்களிருப்பிடத்திற்குப் போக, கோபியர்கள் புறப்பட்டார்கள்.

## 20. "குமகுமகுமயனி"

தரு]
17. ஸௌராஷ்டிரராகம்—த்ரிபுடதாளம் { ஸரிகமபதநிஸ் / ஸ்நிதாபமகமரீஸ

| \|3 O O | \|3 O O | \|3 O O | \|3 O O |
|---|---|---|---|
| | பல்லவி | | |
| க மா த ப தா | ப ப ம பா தா | க மா ப த ப ம | க ம க க ரி ரீ |
| கு ம கு . ம | கு ம . ய னி | வா . ஸ . ன . | தோ. . மு . த்து |
| ஸ ரீ கா ரீ | ஸ நீ ஸா ரீ | க மா பா தா | ப தா நி தா ப \|\| |
| கும் . ம லு | வே ட லி ரி | ஜூ . . ட | ரே . . . . \|\| |
| | அனுபல்லவி | | |
| ப மா பா தா | ஸ் ஸ்ா ரி ஸ் ரீ | ரி க்ா ரீ ஸ்ா | ஸ்நிஸ்ா,நி தநிதப |
| ம ம த தோ | . னு ஸா . ர | வ ரு லெல் ல | ஸா. ர . . த . ரு . |
| ப,தா ஸ்ா ஸ்நிதா | த தா நி தா ப | ப மா ப த ப ம | ம ப ம க ரி ரீ |
| ஸா ம வா ன . லு | கு ரி யிம் . ப | கா . . . . . | வே. . ட்க . க \|\| (குமகும) |
| | சரணங்கள் | | |
| 1. க மா த ப தா | ப ப ம பா தா | க மா ப த ப ம | கபபாமா க ரி ரீ |
| ந லு வங். க | ப க . லு வ | த்து லு தே . ஜ . | ரில் . . . ல . . க |
| ஸ ரீ கா ரீ | ஸ நீ ஸா ரீ | க மா பா தா | ப தா நி தா ப |
| சே ல கு ஸாம் | ரா . ணி போ | க லு க்ரம் ம | கங் . த . போ |

| \|₃ O O | \|₃ O O | \|₃ O O | \|₃ O O |
|---|---|---|---|
| ப மா பா தா | ஷ் ஷ்ா ரி ஷ் ரீ | ரி க்ா ரீ ஷ்ா | ஸ்நிஸ்ா,நி தநிதப |
| டு லு சல் . | லு சு பய் . யே | த ல தீ யு | சு . . . . பன்னீ. |
| ப தா ஸ்ா ஸ்நி தா | த தா நி தா ப | ப மா ப த ப ம | ம ப ம க ரி ரீ \|\| |
| ரு லு ஜில்கு . . | சு . ய . து | கு ல வீ . ரு . | னி . . தோ. . \|\| (குமகும) |
| (மிச்ச | சரணங்களையும் | இதேமாதிரி | பாடவும்) |
| 2. ப ங் கா ரு | சீ . ரே லு | ர ங் கை ன | ர வி கே லு |
| னு ங் க ர | மு லு வே ல | ய ங் க ஸோ | க ஸ‍ா ன பு |
| ஜ ங் க ச | ய னு டகு | ர ங் க ப | தி னி ஜ‍ா சி |
| போ ங் கு சு | த னி வா ர | கே ள க லி ஞ் | சு . சு னு \|\| (குமகும) |
| 3. வ ர மை ன | க ன க நூ | பு ர மு லு | க ல் ல ன |
| யு ர மு ன | மு த் யா ல | ஸ ரு லே ல் ல | க த ல க |
| க ர மு ன | ஸோ க ஸை ன | வி ரி ஸ‍ா ர | டு ல சே வி |
| ஸ ரு சு தி யா | . க ரா ஜ | வ ர து னி | போ க டு சு \|\| (குமகும) |

**தாத்பரியம் :—** வானோர்களெல்லாம் கல்பக விருக்ஷ புஷ்பமாரி பெய்ய, கமகம வென்று வாசனைவீச, கம்பீரத்துடன் வேடிக்கையாக வனிதரத்னங்கள் புறப்பட்டார்கள்! பாருங்கள்!

நாலு பக்கங்களிலும் மத்தாப்பு வத்திகள் பிரகாசிக்க, உற்சாகத்தை விளைவிக்கும் ஸாம்பிராணி வத்தியின் புகைகள் சுற்றிப்பரவ, வாசனைப் பொடிகளைத் தூவிக்கொண்டு, பன்னீர் தெளித்துக்கொண்டு, யதுகுலவீர (கிருஷ்ண)னுடன் புறப்பட்டார்கள்.

ஸ்வர்ணமயமான ஸரிகைப் புடவைகளுடனும், அதிக விலையுற்ற ரவிக்கைகளுடனும், விரல்களில் மோதிரங்கள் பள பளவெனப் பிரகாசிக்கவும், ஸொகஸுடன் பன்னக சயனனை ரங்கபதியைப் பார்த்து ஆனந்த பரவசமடைந்தார்கள்.

மேன்மையான பொற்சிலம்புகள் கல்கல்லென முழங்க, மார்பின்மீதுள்ள முத்து ஸரங்கள் அசைய, கையில் ஸொகஸான பூ விசிறிகளால் விசிறிக்கொண்டு, ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிக்கு வரங்களைக் கொடுத்த கிருஷ்ணனைப் புகழ்ந்துகொண்டே புறப்பட்டார்கள்.

**வசனம் :—** அப்பொழுது கோபிகாமணிகள் வெகு குதூகலத்துடன் கிருஷ்ண பரமாத்மாவை விடுதியில் விட்டு மங்களம் பாடுவது எவ்வாறெனில் ;—

# 21. “மாகுல முனகிஹ”

மங்களம்]

28. ஸுரடிராகம்—சாபுதாளம் { ஸரிமபநிஸ் / ஸ்நிதபமகபமரீஸ

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | பல்லவி | | |
| பா , பா பா | ப பா ப ம பா | ஸ் ஸ்ா ஸ் நி தா | ப நி த ப ம பா |
| மா . கு ல | மு ன கி . ஹ | ப ர மோ . ஸ | கி ன . நீ . கு |
| பா ம நி த பா | , , , ரி ம ப நி | த பா ம க ப ம | |
| மங் . க . ளம் | . . . சு . ப . | மங் . க . ள ம் | |
| ரீ , ஸ் நி ஸ் ரி | ஸ்ா , நி த பா | , , , ரி ம ப நி | த பா ம க ரீ |
| . . நீ . கு . | மங் . க . ளம் | . . . சு . ப . | மங் . க . ளம் |
| , , , ப நி ஸ் ரி | ஸ்ா , நி த பா | , , , ரி ம ப நி | த பா ம க ரீ |
| . . . ஜ . ய . | மங் . க . ளம் | . . . சு . ப . | மங் . க . ளம் |
| | | | ரீ ; ரீ ஸா ‖ |
| | | | . . . . ‖ |
| | அனுபல்லவி | | |
| ரீ , மா பா | நீ , ஸ்ா ரீ | ரி ம்ா ரீ ஸ்ா | நி தா நீ ஸ் ரி |
| மா . கு ல | ப்ரோ. சி ன | ம த ன ஜ | ன க நீ கு . |
| ஸ்ா , நி த பா | , , , ரி ம ப நி | த பா ம க ரீ | , , , ; ; ‖ |
| மங் . க . ளம் | . . . சு . ப . | மங் . க . ளம் | . . . . . ‖ |
| | சரணங்கள் | | |
| 1. நி நீ நீ நீ | நி நீ நீ நீ | நி ஸ்ா நீ தா | ப நி த ப ம பா |
| ம த க ஜ | க ம ன மா | னி த ஸ த் | கு ணு . நீ . கு |
| பா ம நி த பா | , ; ரி ம ப நி | த பா ம க ரீ | , ; ; ; |
| மங் . க . ளம் | . . சு . ப . | மங் . க . ளம் | . . . . |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| ரி ரீ மா பா | நி நீ ஸ்ா ரீ | ரி ம்ா ரீ ஸ்ா | நி தா நீ ஸ் ரி |
| ம த மோ ஹ | ர ஹி த மஞ் | ஜா ள ரூ ப | ம ரி நீ கு . |
| ஸ்ா , நி த பா | , , , ரி ம ப நி | த பா ம க ரீ | , ; ஸா ; \|\| |
| மங் . க . ளம் | . . . சு . ப . | மங் . க . ளம் | . . . . \|\| |
| (மிச்ச | சரணங்களையும் | இதே மாதிரி | பாடவும்) |
| 2. ம ன ஸி ஜ | வை ரி மா | ன ஸ ஸ த | ன . நீ கு |
| ம ங் க ள ம் | . . சு ப | ம ங் க ள ம் | . . . . |
| ம ன வி னி | வி னி ம ம் | மே ம லு கோ ன் | ன . நீ கு |
| ம ங் க ள ம் | . . சு ப | ம ங் க ள ம் | . . . . \|\| |
| 3. மா ம ன | ஸா ன நே ல | கோ ன் ன க் ரு ஷ் | ண . நீ கு |
| ம ங் க ள ம் | . . சு ப | ம ங் க ள ம் | . . . . |
| மா ம ஞே | ஹ ர பா | லி த தி யா க | ரா . ஜ |
| ம ங் க ள ம் | . . சு ப | ம ங் க ள ம் | . . . . \|\| |

தாத்பரியம் :—

எங்கள் குலத்திற்கு இகலோக சௌக்கியத்தையும், பரலோக சௌக்கியத்தையும் கொடுத்த உனக்கு மங்களம்.

சாபத்தினல் மருதமரங்களாக நின்ற (குபேரனின் புத்திரர்களாகிய) நளகூபர, மணிக்கிரீபர்களின் சாபத்தைத் தீர்த்த மன்மதனின் தந்தையாகிய உனக்கு மங்களம்.

மதயானையின் நடையை யுடையவனே! எல்லோராலும் கொண்டாடப்பட்ட சற்குணங்கள் நிறைந்தவனே! உனக்கு மங்களம். காமக்ரோதாதி துற்குணங்களற்றவனே! மங்களமான ரூபத்தையுடையவனே! உனக்கு மங்களம்.

காமனை யெரித்தவனுகிய ஈச்வரன் மனதில் வீற்றிருப்பவனே! உனக்கு மங்களம். எங்கள் வேண்டுகோளைக் கேட்டு அருள்புரிந்த உனக்கு மங்களம்.

எங்கள் மனதில் குடிகொண்ட கிருஷ்ண! உனக்கு மங்களம். லக்ஷ்மியின் மனதைக் கொள்ளைகொண்டவனே! தியாகராஜனைக் காப்பாற்றினவனே! உனக்கு மங்களம். ஜய மங்களம். சுபமங்களம்.

## பலச்ருதி

ச்லோகம் :

தியாகராஜக்ருதாம் புண்யாம் கதாம் ஸாதுமனோஹராம்
யே ச்ருண்வந்தி நரா லோகே தேஷாம் கிருஷ்ண: ப்ரஸீததி ||

தாத்பரியம் :— ஸாதுக்களுக்கு மனோஹரமான தியாகராஜன் செய்த புண்ணிய கதையை (நௌகா சரித்திரத்தை) லோகத்தில் எந்த மனிதர்கள் கேட்கிறார்களோ அவர்களுக்கு கிருஷ்ணன் பிரத்தியக்ஷமாவார்.

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் இயற்றிய
**நௌகா சரித்திரம்**
முற்றிற்று

---

## ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி ஸங்கிரகம்

(ஸ்வாமிகளுடைய நேர் சிஷ்யராகிய வாலாஜா பேட்டை
வெங்கடரமண பாகவதரவர்க ளியற்றியது.)

ஸீஸ பத்யம் :—

ஏகளாகலிதுண்டு - லோகோபகாரியை | நௌகாசரித்ரமுன் - னதிரசிஞ்சே
னேதயாபருடு ப்ரஹ் - லாத பக்திவிஜய | மனுபிரபந்த மோனர்சி - வினுதிகேக்கே
னே மஹாத்முடு ராம - நாமாங்கிதம்பகு | விவித க்ருதுல் ஸேஸி - புவினி நிலிபெ
னேனய சாலி நா - னூன கானதா | னுபமானவிஜ் - ஞானி யய்யே
ரமணனேகுணி வெங்கடரமண பாக | வத க்ருஹம்புன பட நிரூபித ஸ்வரூபு
டய்யே னுதனி தியாகராஜார்ய வர்யு | தைர்யவிஜிதா மராஹார்யு தலதுனேபுடே.

தாத்பரியம் :—எந்த வித்தையுடன் கூடினவர், லோகோபகாரியாக நௌகா சரித்திரத்தை யெழுதினரோ, எந்த தயாபரன் பிரஹ்லாத பக்தி விஜயமென்னும் பிரபந்தத்தை யளித்துக் கீர்த்தியடைந்தாரோ, எந்த மஹாத்மா ராமநாம முத்திரையுடன் பலவித க்ருதிகளைச் செய்து பூமியில் நிற்கிறாரோ, எந்த இங்கிதமே உருவாக நானுவிதமான கான தானங்களில் குறையற்று ஸமானமில்லாமல் விஜ்ஞானி யானரோ, எந்த சற்குண சீலர் வெங்கடரமண பாகவதரின் வீட்டில், பட ரூபமாக உள்ளாரோ, அப்படிப்பட்ட தைரியத்தில் மேரு பர்வதத்தை ஜயித்த மேன்மை வாய்ந்த தியாகராஜார்யரை எப்பொழுதும் ஸ்மரித்துக்கொண்டிருக்கிறேன்.

# ராக லக்ஷண ஸங்கிரகம்

குறிப்பு :—இப்புஸ்தகத்தில் வந்துள்ள ராகங்களில் 5 ராகங்களின் லக்ஷணங்களை மட்டும் இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்ற ராகங்களின் லக்ஷணங்களை இந்நூலாசிரியர் வெளியிட்டுள்ள இதர புஸ்தகங்களிற் காண்க.

## 1. புன்னாகவராளி

ஜன்ய ராகம்; தாய் ராகம் 8-வது மேளகர்த்தா : ஹனுமதோடி.

**ஆரோஹணம் :—** நி ஸ ரி க ம ப த நி

**அவரோஹணம் :—** நி த ப ம க ரி ஸ நி

**ஷட்ஜ**, பஞ்சமத்தைத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள் :—

சுத்த ரிஷபம், சதுச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம். காகலி நிஷாதமும், கமக ரூபமாக மந்த்ர ஸ்தாயியில் பேசுகிறது.

நிஷாதாந்த்ய ராகம். பாஷாங்க ராகம். அன்னிய ஸ்வரமாகிய சதுச்ருதி ரிஷபம் ஸ க ரி கா, ரி க ம ப த பா என்னும் பிரயோகங்களில் பேசும். ஸ க ரி ஸா ரி ஸ நீ என்னும் பிரயோகத்தில் காகலி நிஷாதம் அசைவுடன் பேசும். கமக வரிக ரக்தி ராகம். ஆரோஹணத்தில் சதுச்ருதி ரிஷபமும், ஸாதாரண காந்தாரமும், அவரோஹணத்தில் சுத்த ரிஷபமும், மந்த்ர நிஷாதமும் ராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடலாமெனினும், இரவில் பாட மிக்க உருக்கமாயிருக்கும்.

கருணாரஸப் பிரதானமான ராகம். கல்நெஞ்சு படைத்தவர்களைக் கூட உருகச்செய்யும் ராகம் இது. அரவங்கள் இந்த ராகத்தைக் கேட்டு சீக்கிரம் வசப்படுகின்றன. மகுடியில், பாம்பாட்டிகள் வாசிக்கும் ராகம் இதுவே.

புராதன ராகம். ஓடப்பாட்டுக்கள் (கப்பல்கள்) இந்த ராகத்தில் தான் தொன்று தொட்டுப் பாடப்பட்டு வருகின்றன. சௌககாலப் பிரயோகங்களினல் பிரகாசிக்கும் ராகங்களில் இதுவொன்று. அல்ப ராகம். விசேஷமான ஆலாபனைக்கு இடங் கொடுக்காது. மந்த்ர காகலி நிஷாதத்திலிருந்து மத்ய கைசிகி நிஷாதம் வரைக்குமே இந்த ராகத்தின் ஸஞ்சார எல்லையாகும்.

**ஸஞ்சாரம் :—**

ஸ க ரி ஸா - ரி ஸ *நீ - நி ஸ க *ரி க ம பா நி தா, பா - ம ப த ப ப ம கா ரி ஸா - க க ம மா மா; மா; ப ம க *ரி *ரி க ம ப த பா - க *ரி கா மா பா நி தா, பா - ம ப த ப ப ம கா ரி ஸா ||

### உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| திவ்யநாம கீர்த்தனை | தவதாஸோஹம் | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| நௌகா சரித்திரம் | ஏநோமு | ரூபகம் | ,, |
| | கிருஷ்ணு மாகேமி | சாபு | ,, |
| | ஹரிஹரி நீயோக்க | ஆதி | ,, |
| | கந்தமு புய்யருகா | ஆதி | ,, |
| க்ருதி | ஏஹி அன்ன பூர்ணே | ,, | முத்துஸ்வாமி தீக்ஷிதர் |
| நவாவரண க்ருதி (6-வது) | கமலாம்பிகாயா | ரூபகம் | ,, |
| க்ருதி | கனகசைல | ஆதி | சியாமா சாஸ்திரி |
| பதம் | நின்னுஜூட | த்ரிபுடை | க்ஷேத்ரக்ஞர் |
| தேவாரம் | பைங்கோட்டு | ரூபகம் | திருஞானஸம்பந்தர் |
| சித்தர் பாடல் | ஆடோம்பே | ஆதி | பாம்பாட்டி சித்தர் |
| நந்தனர் சரித்திரம் | பழனமருங்கணையும் | ,, | கோபாலகிருஷ்ண பாரதி |

## 2. ஸௌராஷ்டிரம்

*ஜன்யராகம்; தாய்ராகம் 17-வது மேளகர்த்தா: ஸூர்யகாந்தம்.*

**ஆரோஹணம் :—** *ஸ ரி க ம ப த நி ஸ்*

**அவரோஹணம் :—** *ஸ் நி த ா ப ம க ம ரீ ஸ*

ஷட்ஜ, பஞ்சமத்தைத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள் :—

சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சதுச்ருதி தைவதம், காகலி நிஷாதம், கைசிகி நிஷாதம்.

ஸம்பூர்ண ராகம். வக்ர அவரோஹணம். பாஷாங்க ராகம். அன்னிய ஸ்வரமாகிய கைசிகி நிஷாதம், ப த நி த ப ா என்னும் பிரயோகத்தில் பேசும். ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம். த த ஸ்ா நிஸ்ா, ஸ்தாபம முதலியவை விசேஷ பிரயோகங்கள். ரிஷப, காந்தார, தைவதங்களும், கைசிகி, காகலி நிஷாதங்களும் ராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடலாம். மிக்க சுபகரமான ராகம்.

புராதன ராகம். **ஸங்கீத ரத்னகரம், ஸங்கீத மகரந்தம், ஸங்கீத ஸமய ஸாரம்** முதலிய பூர்வ கிரந்தங்களில் இந்த ராகம் காணப்படுகிறது.

**ஸஞ்சாரம் :—**

த த ஸ் ஸ் ரீ ரீ - ஸ் நி ஸ் ரீ ஸ்ா ஸ் நி தா - த த ஸ் ஸ் ரீ - ஸ் ரி க் ம் ரீ க் ரி ஸ்ா - ஸ் நி தா - த த ஸ்ா ஸ் நி தா - த *நி *நி த பா ம - க ம ப த நி ஸ் ரி ஸ் - ஸ் நி தா - த *நி த பா ம - க ம ரீ ஸா - ஸ நி தா ஸ ஸ ரி ரி ஸா ||

உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| க்ருதி (பிரஹ்லாத பக்தி விஜயம்) | ஸ்ரீ கணபதினி | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| மங்களம் (பிரஹ்லாத பக்தி விஜயம்) | நீநாம ரூப முலகு | ,, | ,, |
| நௌகா சரித்திரக் கீர்த்தனைகள் | ஏமனி நேர நம்மு | சாபு | ,, |
| | ஏமேமோ தெலியக | ,, | ,, |
| | குமகுமகுமயனி | ,, | ,, |
| ஸங்க்ஷேப ராமாயண கீர்த்தனை | வினயமுனனு | ,, | ,, |
| நவக்ரஹ கீர்த்தனை | ஸூர்ய மூர்த்தே | த்ருவம் | முத்துஸ்வாமி தீக்ஷிதர் |
| க்ருதி | வரலக்ஷ்மீம் பஜரே | ஆதி | ,, |
| ,, | நின்னு ஜூசி | ஆதி | பட்டணம் ஸுப்ரமண்யய்யர் |
| தரங்கம் | சரணம்பவ | ,, | தீர்த்த நாராயணஸ்வாமி |

## 3. ஸுரடி

*ஜன்யராகம்; தாய்ராகம் 28-வது மேளகர்த்தா:—ஹரிகாம்போஜி.*

**ஆரோஹணம் :—** ஸ ரி ம ப நி ஸ்

**அவரோஹணம் :—** ஸ் நி த ப ம க ப ம ரீ ஸ

ஷட்ஜ, பஞ்சமத்தைத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள் :—

சதுச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சதுச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

ஔடவ வக்ர ஸம்பூர்ண ராகம். அவரோஹணம் வக்ரம். வர்ஜ ராகம். ஆரோஹணத்தில் காந்தார, தைவதங்கள் வர்ஜம். உபாங்க ராகம். ரி, ம, நி ராகச்சாயா ஸ்வரங்கள். தார ஸ்தாயியில் ஸ்ரிக்ரி என்னும் பிரயோகத்தில் காந்தாரம் சற்றுக் குறைவாகப் பேசுவது இயல்பு. கைசிகி நிஷாதம் இந்த ராகத்திற்கு ஒரு முக்கிய மூர்ச்சனா ஸ்வரமாகும். லக்ஷ்யத்தில் மந்த்ரஸ்தாயி நிஷாதத்திற்குக் கீழ் ஸஞ்சாரம் காண்பதரிது. கமக வரிக ராகம். தேசீய ராகம். மிக்க மங்களகரமான ராகம். எப்பொழுதும் பாடலாம்.

**ஸஞ்சாரம் :—**

ஸ ரி மா மா ம க ப ம ரீ - ரி ம ரீ ஸா - நி ஸ ரி மா மா ம க - ம ப நி
த பா மா ம க - ம ப ம நி த பா ம க ப ம ரி - ரி ம பா நி நி த பா - ம ப நி நி
ஸ்ா - ஸ்ா நி த நி ஸ் நி த பா - ப நி ம பா - ம ப நி நி ஸ்ா, ஸ் - ஸ்ா நி த நி ஸ்
ரி ஸ்ா - நி த நி ஸ் நி த நி த பா - ம ப நி நி ஸ்ா - நி ஸ் ரி ம்ா ம் க் ப் ம் ரீ ரீ ஸ்ா -
ஸ்ா நி த நி ஸ் ரி ஸ்ா - நி த நி ஸ் நி த நி த பா பா . ரி ம ப நீ நீ நி த - நி ஸ்
நி த நி த பா - ரி ம ப நீ த பா - மா ம க - ம ப ம நி த பா - ம க ப ம ரீ ரீ ஸா ||

உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| க்ருதி | கீதார்த்தமு | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| ,, | வேரேவ்வரே | ,, | ,, |
| ,, | ராமசந்த்ர நீதய | ,, | ,, |
| ,, | ராமதைவமா | ரூபகம் | ,, |
| ,, | பஜனபருல | ,, | ,, |
| நௌகா சரித்திரம் | ச்ருங்காரிஞ்சுகோனி | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| ,, (மங்களம்) | மாகுலமுன | சாபு | ,, |
| க்ருதி | பாலஸுப்ரமண்யம் | ஆதி | முத்துஸ்வாமி தீக்ஷிதர் |
| நவக்ரஹ கீர்த்தனே | அங்காரக மாச்ரயாம்யஹம் | ரூபகம் | ,, |
| க்ருதி | பரதேவி | ,, | வீணைகுப்பய்யர் |
| ,, | பராமுகமேலரா | ஆதி | — |
| ,, | கருடகமனராரா | ,, | பத்ராசல ராமதாஸர் |
| கீர்த்தனே | அம்பர சிதம்பர | ஜம்பை | முத்துத்தாண்டவர் |
| ,, | ஏதுக்கித்தனே | ரூபகம் | மாரிமுத்தாப் பிள்ளை |
| நந்தனர் சரித்திரம் | வாராமலிருப்பாரோ | ஆதி | கோபால கிருஷ்ண பாரதி |
| தேவாரம் | பித்தாபிறை சூடி | ரூபகம் | சுந்தரமூர்த்தி நாயனர் |
| அருட்பா | மாற்றறியாத | சாபு | ராமலிங்கஸ்வாமி |
| ஜாவளி | மரியாத தெலியகனே | ரூபகம் | — |
| தில்லானு தரு | நாதிரிதானி | ஏகம் | கிருஷ்ணஸ்வாமி அய்யர் |
| மங்களம் | ஸ்ரீராமசந்த்ரனுக்கு | ஆதி | அருணசலக்கவிராயர் |

## 4. தேவகாந்தாரி

*ஜன்யராகம்; தாய் ராகம் 29-வது மேளகர்த்தா: தீர சங்கராபரணம்.*

**ஆரோஹணம் :—** ஸ ரி ம ப த ஸ்

**அவரோஹணம் :—** ஸ் நி த ப ம க ரி ஸ

சிலர் இந்த ராகத்தின் ஆரோஹணம் 'ஸ ரி ம ப த நி ஸ்' யென அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனல் 'ப த நி ஸ்' யென்னும் பிரயோகம் எப்பொழுதாவது வருமேயன்றி அடிக்கடி வராது. அப்பிரயோகத்திலும் தைவதம் தீர்க்கமாகவே வரும். சில முறை ம ப தா ; நி ஸ் ரீ ; என்றும் வரும்.

ஷட்ஜ, பஞ்சமத்தைத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள் :—

சதுச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சதுச்ருதி தைவதம், காகலிநிஷாதம், கைசிகி நிஷாதம்.

ஔடவ ஸம்பூர்ண ராகம். வர்ஜ ராகம். ஆரோஹணத்தில் காந்தார, நிஷாதங்கள் வர்ஜம். பாஷாங்க ராகம்; அன்னிய ஸ்வரமாகிய கைசிகி நிஷாதம் ப த நி த ம ப த ப, பா த நி த ப யென்னும் பிரயோகங்களில் வரும். சௌக கால பிரயோகங்களினால் ராகத்தின் களை தெற்றென விளங்கும் ராகங்களில் இது வொன்று. த, க, ரி ஸ்வரங்கள் அவரோஹண கிரமத்தில் ராகச்சாயா ஸ்வரங்களாகும். கமக வரிக ரக்தி ராகம். ஸ ரி க மா ; க ரீ (தீர்க்கமான மத்யமம்) ஒரு ரக்தியான விசேஷ ஸஞ்சாரம். வீர ரஸத்திற்கெடுத்த ராகம். தைரியத்தையும், உற்சாகத்தையும் உண்டுபண்ணும் ராகம். எப்பொழுதும் பாடலாம். புராதன ராகம். நாரதருடைய ஸங்கீத மகரந்தத்தில் இந்தராகம் காணப்படுகிறது. பண் ஸாதாரி என தமிழிசையில் வழங்கப்படும் ராகம் இதுவே. சூர்ணிகைகள் இந்த ராகத்தில் பாடப்படுகின்றன. தீவ்ர அந்தர காந்தார (ச்யுத மத்யம காந்தாரம்) ச்ருதியை இந்த ராகத்தில் தெளிவாகக் காணலாம்.

சென்ற நூற்றாண்டில் தியாகராஜ ஸ்வாமிகள் சென்னையில் வந்து தங்கியிருந்த காலத்தில் இந்த ராகத்தை ஆறுநாட்கள் பாடினாராம்.

குறிப்பு :—ஸுப்பராமதீக்ஷிதர், ஸங்கீத ஸம்பிரதாய பிரதர்சனியில், இந்த ராகத்தை, 22-வது மேளத்தில் ஜன்யமான ஒரு உபாங்க ராகமாகக் கொடுக்கிறார். இதற்கு லக்ஷ்யமாக, புரந்தரதாஸரின் ஸுளாதி ஒன்றையும், பெத்த தாஸரியின் கீர்த்தனை யொன்றையும் கொடுக்கிறார். இந்த ராகத்தைச் சிலர் கர்னாடக தேவகாந்தாரி யென்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் இந்த ராகம் வழக்கத்திலில்லை. அனுஷ்டானத்திலிருக்கும் தேவகாந்தாரியைத் தேசீய தேவகாந்தாரியென ஸுப்பராம தீக்ஷிதர் குறிப்பிடுகிறார்.

**ஸஞ்சாரம் :—**

ஸா ஸ நி தா - ஸ ரீ மா ; க ரீ - ஸ ரி கா ஸ ரி ஸா ஸ நி தா - ஸ ரீ மா

ம க ரீ - ஸ ரி ம ப தா த ப - ம ப த ஸ்ா ஸ்ா ஸ் நி தா - த த ஸ் ஸ் ரி ஸ் ரீ

ம்ா க் ரீ - ஸ் ரி க்ா ஸ் ரி ஸ்ா ஸ் நி தா - த த ரி ரி ஸ்ா ஸ் நி தா - த *நி *நி த பா -

ப த *நி த ம ப த ப மா, க ரீ - ஸ ரி கா ஸ ரி ஸா ஸ நி தா - த த ரி ரி ஸா ||

உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| க்ருதி | க்ஷீரஸாகர | ஆதி | தியாகராஜஸ்வாமி |
| ,, | கோலுவையுன்னாடே | ,, | ,, |
| ,, | வினராதா நா மனவி | ,, | ,, |
| ,, | கருணா ஸமுத்ர | ,, | ,, |
| ,, | ஸீதாவர | ,, | ,, |

| | | | |
|---|---|---|---|
| க்ருதி | நாமோரால கிம்ப | ரூபகம் | தியாகராஜஸ்வாமி |
| ,, | மரவகரா | ஆதி | ,, |
| ,, | எவரு மனகு ஸமான (நௌகா சரித்திரம்) | ,, | ,, |
| ,, | க்ஷிதிஜா ரமணம் | ,, | முத்துஸ்வாமி தீக்ஷிதர் |
| ,, | ஸ்வாமிகி ஸரி | ,, | மானம்பு சாவடி வேங்கட ஸுப்பய்யர் |
| கீர்த்தனை | எந்நேரமு முந்தன் | ,, | கோபாலகிருஷ்ணபாரதி |
| ,, | எக்காலமுமுந்தன் | ,, | வேதநாயகம் பிள்ளை |
| தேவாரம் | மாதர் பிறைக்கண்ணி யானை | ,, | திருநாவுக்கரசு ஸ்வாமி |

## 5. வராளி

39-வது மேளகர்த்தா ராகம்; ரிஷி சக்கரத்தில் மூன்றாவது ராகம். கடபயாதி ஸங்க்யைக்காக, ஜாலவராளி ஜாலவராளி யென்று பெயரிடப்பட்டது. வெங்கடமகி யவர்கள் ஸம்பிரதாயத்தில், 39 - வது மேளத்திற்கு, தாலி வராளி தாலிவராளி யென்னும் பெயர் காணப்படுகிறது. பிரசித்தமான பிரதி மத்யம ராகம்.

**ஆரோஹணம் :—** ஸ ரி க ம ப த நி ஸ்

**அவரோஹணம் :—** ஸ் நி த ப ம க ரி ஸ

இந்த ராகத்தில் 'ஸ க ரி க ம' யென்னும் ரஞ்சக பிரயோகமும் வருவதினால், 'ஸ க ரி க ம ப த நி ஸ்' யென்பதே இதன் ஆரோஹண மென சில லக்ஷணகாரர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

ஷட்ஜ, பஞ்சமத்தைத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள் :—

சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், பிரதி மத்யமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

ஸம்பூர்ண ராகம். ஸர்வ ஸ்வர கமக வரிக ராகம். கனராகம். கன பஞ்சக ராகங்களில் இது வொன்று. க, ம ராகச்சாயா ஸ்வரங்கள். கருணாரஸப் பிரதானமான ராகம். விஸ்தாரமான ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் ராகம். எப்பொழுதும் பாடலாம். புராதன ராகம். **ஸங்கீத ரத்நாகரம், ஸங்கீத மகரந்தம், ஸங்கீத ஸமய ஸாரம்** முதலிய பூர்வ கிரந்தங்களில் இந்த ராகம் காணப்படுகிறது.

இந்த ராகத்தைக் கற்றுக்கொடுத்தாலும், இந்த ராகத்திலுள்ள உருப்படிகளைச் சொல்லிக்கொடுத்தாலும், குரு சிஷ்யர்களுக்குள்ள பரஸ்பர அன்பிற்குப் பங்கம் நேரிடுமென இந்த ராகத்திற்கு ஒரு தோஷம் தொன்றுதொட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் நேராக குரு முகமாக இந்த ராகத்திலுள்ள

உருப்படிகளைக் கற்றுக்கொண்ட பேர் கிடையாது. வித்வான்கள் பாடுங்கால் மாணுக்கர்கள் கேட்டுத் தெரிந்துகொள்வது வழக்கம். இக்காரணம்பற்றியே இந்த ராகத்திலுள்ள பல அரிய உருப்படிகள் மறைந்து போயின.

இந்த ராகத்தின் மத்யமத்தை நன்கு கவனித்தல் வேண்டும். வழக்கமான பிரதிமத்யமத்திற்குச் சற்று அதிகமாகவும், பஞ்சமத்திற் கருகிலும் உள்ள இதை, வராளி மத்யம மென்றே பூர்வ கிரந்தங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது.

**ஸஞ்சாரம் :—**

க க ம ம பா , ம - ப த ப மா - பா ம ப த ப ம - க க ம ம பா , ம க க ரி ரி ஸா - நி ஸ க ரி க க ம ம பா , ம் - ப த ப மா - ப த நி நி ஸ்ா, ஸ் - க்ா , ரி ஸ்ா - நி ஸ் க் ரி - க் ம் ப் ம் க் க் ரி ரி ஸ்ா - க் க் ரி ஸ்ா - ஸ்ா நி ஸ் ரி ஸ் நி த பா , ம - பா ம ப த ப மா - க க ம ம பா, ம - க க ரி ரி ஸா ||

உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| பஞ்சரத்னம் | கனகனருசிரா | ஆதி | தியாகராஜ ஸ்வாமி |
| க்ருதி | நோரேமி ஸ்ரீராம | ,, | ,, |
| ,, | மரகதமணி | ,, | ,, |
| ,, | நேபோகட | ஜம்பை | ,, |
| நௌகா சரித்திரம் | இந்துகேமி | சாபு | ,, |
| க்ருதி | மாமவ மீனுக்ஷி | மிச்ர ஏகம் | முத்துஸ்வாமி தீக்ஷிதர் |
| ,, | சேஷாசல நாயகம் | ரூபகம் | ,, |
| ,, | கருணஜொடவம்ம | ஆதி | சியாமாசாஸ்திரி |

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 5 | పావనసుత | పావననత |
| 24 | 18 | பறிக்கப்போகும் | வாங்கப்போகும் |
| 33 | 16 | மதிதல | முதிதல |
| 47 | 12 | ஹோதாதுல | ஹொதாதுல |

Formes 4 to end printed at The Liberty Press, G. T., Madras.